# தமிழரசு

.1977 முதல் இதழ் 50 காசு






30—6—1977-ல் பதவியேற்ற




பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 4—6—1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் அனைத்து இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினர்.



# தமிழரசு

| மலர் : 8 | ஜூலை 1977 முதல் இதழ் | இதழ் : 1 |
|---|---|---|

## இந்த இதழில்

பக்க எண்

அண்ணா வழியில் அரசை நடத்துவோம் .. 18
தமிழக மக்களுக்கு முதலமைச்சர் அளித்த உறுதி .. 22
தமிழகத்தில் புதுமலர்ச்சி காண்போம்! .. 26
வரவு—செலவுத் திட்டமிடுதல் .. 41

அட்டைப்படம் உதவியதற்காக நன்றி: பொம்மை, சென்னை-26.



தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 30.6.1977 அன்று அண்ணா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, ‘பேரறிஞர் அண்ணா வழி நடந்து அவரது இலட்சியங்களை நிறைவேற்றுவேன்’ என்று


# படமும் செய்தியும்!



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களில் தனிப்பெரும்பான்மையுள்ள கட்சியாக வெற்றி பெற்ற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டப் பேரவை உறுப்பினர்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு எம். ஜி. ஆர். அவர்கள், தமது அமைச்சரவைப் பட்டியலை ஆளுநரிடம் அளிப்பதற்காக 29.6.1977 அன்று கிண்டி ராஜ்பவனுக்குச் சென்ற போது அவரை, ஆளுநர் மகிழ்வுடன் வரவேற்றார்.

திரு எம். ஜி. ஆர் அவர்கள், அமைச்சர்களின் பட்டியலை 29.6.1977 அன்று ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களிடம் அளிக்கிறார். திரு கி. மனோகரன் அவர்கள் உடன் உள்ளார்.






ஆங்கிலேயர் ஆட்சியால் அடிமைப்பட்டுக் கிடந்த நம் நாட்டிற்கு-அகிம்சைவழி நின்று போராடி-விடுதலை வாங்கித் தந்த உலக உத்தமர் அண்ணல் காந்தியடிகளின் சிலைக்கு 30.6.1977 அன்று-முதலமைச்சராகப் பதவியேற்கும் முன்-திரு எம்.ஜி.ஆர் அவர்கள் மாலை அணிவித்து, அண்ணலிடம் ஆசி வேண்டினார்.

அடுத்து, தன்னை ஆளாக்கி விட்டவரும், 'தென்னாட்டுக் காந்தி' என்று புகழப் பட்டவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் நீங்காத்துயில் கொண்டுள்ள சமாதியில் மலர்வளையம் வைக்க திரு எம். ஜி. ஆர். அவர்கள் விரைந்து சென்றார்.






"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!" என்று கூறிய பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனியாக விளங்கும் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் 30.6.1977 அன்று–முதலமைச்சராகப் பதவியேற்கு முன்பு-அண்ணா சமாதியில் மலர் வளையம் வைத்து, ஆசி வேண்டினார்.


இருள் சூழ்ந்த தமிழகத்தில் ஒளிவிளக்கேற்றி வைத்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு 30.6.1977 அன்று திரு எம் ஜி.ஆர் அவர்கள் மலர்மாலை அணிவித்து, "நீங்கள் ஏற்றிய ஒளிவிளக்கை, அண்ணா வழி நின்று பாதுகாப்பேன்" என்று உறுதி எடுத்துக் கொண்டார்.







சென்னை இராஜாஜி மண்டபத்தில் 30.6.1977 அன்று நடைபெற்ற அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில், பதவிப்பிரமாணம் செய்துவைக்க வந்த ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், முதலமைச்சராகப் பதவி ஏற்கவிருந்த திரு எம். ஜி. ஆர் அவர்களுடன் கைகுலுக்கி மகிழ்கிறார்.

இராஜாஜி மண்டபத்தின் உள்ளே நடைபெறும் பதவியேற்பு விழாவைக் காணமுடியாத மக்கள், மண்டபத்தின் முன்னே திரண்டு 'அண்ணா வாழ்க', 'புரட்சித் தலைவர் வாழ்க!', 'மக்கள் திலகம் வாழ்க' என முழங்கி, மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வாழ்த்தொலி வழங்கிய வண்ணமிருந்தனர்!







தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்கும் திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கு, ஆளுநர் அவர்கள் 30.6.1977 அன்று காலை 9-15 மணியளவில் இராஜாஜி மண்டபத்தில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.




முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைக்காண, அண்ணாசாலையில்,
அண்ணாசிலையின் நாற்புறமும், திரண்டிருந்த மக்கள் வெள்ளம்!



முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட திரு எம். ஜி. ஆர். அவர்கள், தம் பணியைத் துவங்கக் கோட்டைக்குச் செல்லுமுன், சென்னை அடையாறுப் பகுதியில் அமைந்துள்ள மூதறிஞர் இராஜாஜி நினைவாலயத்திற்குச் சென்று இராஜாஜி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து, ஆசிவழங்குமாறு வேண்டினர்.

அடுத்து, நாட்டின் நலனுக்காகவே தம்வாழ்நாளை எல்லாம் அர்ப்பணித்துக்கொண்ட பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நினைவகத்திற்குச் சென்று, மலர்வளையம் வைத்து நாட்டிற்கு உழைக்க நல்லாசி வழங்குமாறு வேண்டினர்.




# அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சி




நிதியமைச்சராக திரு. கி. மனோகரன்


பொதுப்பணித் துறை அமைச்சராக திரு. ச. இராமச்சந்திரன்





சட்ட அமைச்சராக திரு. கே. நாராயணசாமி முதலியார்


உணவு அமைச்சராக திரு. ஜி. ஆர். எட்மண்ட்






செய்தி-மக்கள் தொடர்புத்துறை அமைச்சராக திரு. ஆர். எம். வீரப்பன்


கல்வி அமைச்சராக் திரு. சி. அரங்கநாயகம்






உள்ளாட்சித்துறை அமைச்சராக திரு. கே. காளிமுத்து


தொழிலாளர் நலத்துறை அமைச்சராக திரு. எஸ். இராகவானந்தம்






அரிசனநலத் துறை அமைச்சராக திரு. பி. சௌந்தரபாண்டியன்


போக்குவரத்துத்துறை அமைச்சராக திரு. சி. பொன்னையன்






சமுக-நலத்துறை அமைச்சராக செல்வி. பி. டி. சரஸ்வதி

வேளாண்மைத்துறை அமைச்சராக திரு. ப. குழந்தைவேலு





கைத்தறித்துறை அமைச்சராக திரு. கே. இராஜாமுகமது

அண்ணல் காந்தியடிகளின் அருமை நண்பரும், சர்வோதயத் தலைவரும், சுதந்தரப் போராட்ட வீரருமாகிய 94-வயதுடைய திரு. ரவிசங்கர் மகராஜ் அவர்கள் 1—7—1977 அன்று காலை, தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்கு ஆசி வழங்கினார். ஆளுநர் அவர்களும், சட்டமன்றப் பேரவையின் தற்காலிக சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்களும் உடனிருந்தனர்.





இந்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அவர்களைத் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் 2.7.1977 அன்று புதுடில்லியில் சந்தித்து உரையாடினர்.

இந்திய அரசின் பெட்ரோலியம் - இரசாயனப் பொருள் அமைச்சர் திரு பஹுகுணா அவர்களைத் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 2-7-1977 அன்று புதுடில்லியில் சந்தித்து உரையாடினர்.



# அண்ணா வழியில் அரசை நடத்துவோம்

"அன்புக்குரிய தாய்க்குலமே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே! இதயதெய்வம் அண்ணாவின் மீது ஆணை யிட்டு, இங்கே உறுதி எடுக்க விரும்பு கிறேன்.

"அங்கு (ராஜாஜி மண்டபத்தில்) நடந்தது அரசாங்கச் சடங்கு. ஆனால் இங்கே நடப்பது உங்களின் கட்டளையை எதிர்பார்த்து நடக்கும் சடங்கு.

"மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற அண்ணாவின் தத்துவப்படி மக்களின் பிரதிநிதிகள் நாங்கள் என்ற எண்ணம் தவறாமல் இந்த அரசாங் கத்தை நடத்துவோம்.

"எங்கள் அமைச்சரவையின் சார்பில் தமிழகத்தில் உள்ள மக்களுக்கும், இந்தி யத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங் களில் வாழுகிற தமிழ் மக்களுக்கும் நாங்கள் உழைப்போம்.

"மக்களின் எண்ணங்களை— மக்களின் விருப்பங்களை — சட்டமாக்க வும், அவர்களது தேவைகளை நிறை வேற்றவும்தான் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள் சட்டமன்றத்துக்கு அனுப்பப்படுகிறார்கள் என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல அதனை உள்ளத்திலே இருத்தி, இலஞ்ச லாவண்யம் இல்லாத—ஊழலற்ற— நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத— அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத் தாகிலும் பாடுபடுவோம். எங்களின் வாழ்வுவசதிகள் அத்தனையும் இழக்க வேண்டிய நிலை வந்தாலும் அதற்காக எதிர்ப்படுகிற அத்தனை தடைகளையும் எதிர்த்து எங்கள் கடமைகளை நிறை வேற்றுவோம். இதனை அமரர் அண்ணா அவர்களின் மீது ஆணையிட்டு அமைச்சர வையின் சார்பில் தெரிவித்துக் கொள் கிறேன்.

"இப்பொழுது உங்களது ஆசி பெற்று எங்களது பணியைத் தொடரச் செல்கிறோம்.

"அண்ணா நாமம் வாழ்க!"

[முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர், அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்ட மான மேடையில் இருந்து, தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய உரை.]



# தமிழக அமைச்சர்கள்



திரு கி. மனோகரன்
*நீதியமைச்சர்*



திரு எம். ஜி. இராமச்சந்திரன்
*முதலமைச்சர்*



திரு. ச. இராமச்சந்திரன்
*பொதுப்பணித்துறை*
*அமைச்சர்*



திரு கே. நாராயணசாமி
முதலியார்
சட்ட அமைச்சர்



திரு ஜி. ஆர். எட்மண்ட்
உணவு அமைச்சர்



திரு ஆர். எம். வீரப்பன்
செய்தி மக்கள் தொடர்புத்
துறை அமைச்சர்




திரு சி. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்



திரு கே. காளிமுத்து
உள்ளாட்சித்துறை
அமைச்சர்



திருஎஸ்இராகவானந்தம்
தொழிலாளர்நலத்துறை
அமைச்சர்



திரு பி. சௌந்தர
பாண்டியன்
அரிசன நலத்துறை அமைச்சர்



திரு சி. பொன்னையன்
போக்குவரத்துத்துறை
அமைச்சர்



செல்வி பி. டி. சரஸ்வதி



திரு ப. குழந்தைவேலு



திரு. கே. இராஜா முகமது



# தமிழக மக்களுக்கு முதலமைச்சர் அளித்த உறுதி

**1967-ஆம்** ஆண்டு தமிழக மக்கள் எந்த நம்பிக்கையுடன் அமரர் பேரறிஞர் அண்ணாவைத் தமிழகத்தின் முதலமைச்சராக ஆக்கினார்களோ, அந்த அண்ணாவின் கொள்கைகள் மீண்டும் எந்தவிதத் தடங்கலும் இன்றி, குறைவும் இன்றி, ஊழல், இலஞ்சம், உறவினர்களுக்குச் சலுகை போன்ற நீதிக்கு எதிரான செயல்முறைகளை அடியோடு நீக்குவதற்கும், 'உழைப்பவரே உயர்ந்தவர்', 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்', 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற தத்துவத்தின் அடிப்படையில், தமிழகத்தில் மீண்டும் நல்லாட்சி நடைபெற வேண்டும் என்ற பேரார்வத்தோடு அகில இந்திய அ.தி.மு.க.வை ஆட்சியில் அமர்த்தி இருக்கிறார்கள்.

### மக்கள் கட்டளைப்படி கடமையைச் செய்வோம்!

"நாங்கள் மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக நேர்மையான வழியில் உழைப்போம். எங்களுடைய நன் முயற்சிகளுக்கு, யார் ஊறு விளைவிக்க முயன்றாலும் அதை மக்களுக்கு அறிவித்து, மக்களின் கட்டளைப்படி எங்கள் கடமையைச்செய்வோம் என்பதைத் தமிழக மக்களுக்கு உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

### நீதியின் முன் நிறுத்திடுவோம்!

"தமிழக மக்களின் பணத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும், நிரபராதிகளின் சாவுக்கு யார் காரணமாக இருந்த போதிலும்—அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் — அவர்களையும் நீதிக்கு முன் நிறுத்தி, யார் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தாலும், மக்கள் தந்த அதிகாரத்தைத் தவறான வழியில் துர்விநியோகம் செய்யாமல் தடுக்க —எச்சரிக்க—நீதியின் தீர்ப்பு உதவி செய்ய வேண்டும் என்று மக்களுக்குத் தந்த வாக்குறுதியைத் தங்கு தடையின்றி நிறைவேற்றப் பாடுபடுவோம்.

### வறுமையை நீக்குவோம்!

"ஏழ்மை, வறுமை இவைகளை நீக்க நல்ல திட்டங்களைத் தீட்ட நிபுணர்களின்

ஆற்றல், அறிவு நிச்சயம் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்போம்!**

"மதுவிலக்கை நேர்மையான வழியில், மதுவின் தீமையைப் பற்றி மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்குத் தக்க முறையில் நடவடிக்கை எடுத்துத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க நிச்சயம் பாடுபடுவோம்.

"நிறையச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பற்றியும், எனது கட்சியின் மற்ற தலைவர்கள் பற்றியும், எனது அமைச்சரவையில் இடம் பெற்று இருப்பவர்கள், இனி பங்கு பெற இருப்பவர்கள் அனைவர் பற்றியும் மக்கள் நன்கு புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

**கடமையைச் சீரிய முறையில் செயல்படுத்துவோம்**

"எனவே என்னை வாழவைத்த, வாழவைத்துக் கொண்டிருக்கிற தமிழக மக்களுக்கு—தெய்வங்களுக்கு இதயபூர்வமான விளக்கத்தைக் கூறி நாங்கள் எங்கள் கடமையைச் சீரிய முறையில் செயல்படுத்துவோம் என்று உறுதிகூறி இப்போது நிறுத்திக் கொள்கிறேன்.

**மக்களிடம் எதையும் மறைக்க மாட்டேன்**


"தமிழக மக்களின் ஆதரவு என்றென்றும் எங்கள்பால் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. மக்களிடம் நாங்கள் எதையும் மறைக்க மாட்டோம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு எங்கள் மீது உண்டு. அந்த உறுதியோடும், தமிழக மக்களின் ஆசியோடும் எங்கள் பணியைத் தொடங்குகிறோம். அண்ணா நாமம் வாழ்க!''

**(முதலமைச்சராகப் பதவி ஏற்றபின், திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக மக்களுக்கு விடுத்துள்ள செய்தி).**



திரு முனு ஆதி

சபாநாயகர்



திரு எஸ். திருநாவுக்கரசு

துணை சபாநாயகர்




அண்ணா சாலையில், அண்ணா சிலையருகே அலைகடலென சூழ்ந்திருந்த இலட்சக் கணக்கான மக்களிடையே மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள்.

# தமிழகத்தில் புது

"தலைமைச் செயலர் அவர்களே! அமைச்சர் பெருமக்களே! இங்கே குழுமியுள்ள தாய்க் குலமே! ஆன்றோர்களே! சான்றோர்களே! அறிவு மிக்கவர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே! எவ்வளவு தொல்லைகள் இருந்தாலும்—எவ்வளவு துன்பங்கள் இருந்தாலும் நகைச்சுவையோடு அனுபவிக்கத் தகுந்த அறிவு தமிழனுக்கு உண்டு என்பதை, மிக அழகாக இங்கே பேசியவர்கள் எடுத்துக் காட்டியதைக் கண்டு உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகின்றேன்.


''தமிழகத்தின் முதலமைச்சர் என்ற பெயரைத் தாங்கி, அந்தப் பதவியில் இன்றைய தினம் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று உறுதி கூறி, நானும் எனது உடன்பிறப்புக்களான மற்ற அமைச்சர்களும் ஆட்சிக்கட்டிலிலே அமருகிறோம் என்றால், எங்களுடைய ஆற்றலை, எங்களுடைய அனுபவத்தை மட்டும் நம்பியோ அல்ல என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை இல்லை என்றாலும், நான் இங்கே என்னுடைய கடமையின் வாயிலாக அவைகளைத் தெரிவித்துக் கொள்வது எனது நீங்காத பொறுப்பு என்று கருதுகிறேன்.

''இங்கே பேசிய தலைமைச் செயலாளர் அவர்கள் மிகத் தெளிவாகத் தங்களுடைய கடமை எப்படி என்பதை அவர்கள் உணர்ந்திருக்கின்ற பாங்கினையும், அவர்களோடு ஒத்துழைக்கின்ற உங்கள் அனைவருடைய பொறுப்பு மிக்க பணியினையும் தெளிவாக எடுத்து, எங்களுக்கு ஆறுதல் கூறுவதுபோல, உத்திரவாதம் அளித்திருக்கின்றார்கள். அதுபோலவே திரு ரங்கராஜன் அவர்களும், திரு முனுசாமி அவர்களும், 'தேவையில்லை, தேவையில்லை' என்று சொல்லியே, எவ்வளவு தேவை இங்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். 'கேட்கமாட்டேன், கேட்கமாட்டேன்' என்று சொல்லிக் கொண்டு, 'நீங்களாகத் தந்துவிடுங்கள்' என்று எச்சரிப்பதுபோல—பள்ளி மாணவர்க்கு ஆசிரியர் தெளிவுபடுத்துவது போல—மிக அழகாக இங்கே சுட்டிக் காட்டியதை உண்மையிலேயே நான் மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள் என்று என்னைக் கூறினார்கள். இப்பொழுது

## முதல்வர் திரு எம். ஜி. ஆர்

### அவர்களின் பேருரையில் சில பகுதிகள்.




# மலர்ச்சி காண்போம்!

''எடுத்து, எடுத்துச் சிவக்க வேண்டிய கரங்களாக'' என்னை ஆக்கிவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நாடு புரிந்திருக்கும்; நீங்கள் நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. நாட்டிலே உள்ள பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதை, ஐந்தாண்டுகள் அல்லது ஆறு ஆண்டுகள் இடையே பதவிக்கு வந்து செல்லுகின்றவர்கள், ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று கற்பனை செய்வதைவிட அறியாமை வேறு இருக்காது என்பதை நீங்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வீர்கள். இருபது, முப்பது ஆண்டுகளாக அனுபவம் பெற்ற நீங்கள், இந்நாட்டுக்கு — என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்து —இன்னமும் உழைக்கின்றீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போதே, மக்களால் அவ்வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலைக்கேற்ப — நம்பிக்கைக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு அமைச்சு — ஐந்தாண்டு அல்லது ஆறு ஆண்டுக் காலத்தில் எதைத்தான் தீவிரமாக—திட்டவட்டமாக—தீர்த்து வைத்து நிறைவேற்ற முடியும் என்பதை உங்கள் சிந்தனைக்குக் கேள்வியாக வைத்து, உங்களுக்குத் தெரியாத ஒன்றை உங்களுக்குப் புரிய வைக்க முற்படுவதான ஒரு நிலையை உருவாக்க நான் விரும்பவில்லை.

''எந்த அமைச்சர்களானாலும் எப்படிப்பட்ட திறமை படைத்த அமைச்சர்களானாலும்—பதவியிலே வந்து உட்காரும்பொழுது அவர்கள் பதவியைப் பற்றி எண்ணுவார்களேயானால்—எவ்வளவு உயர்ந்த பதவி என்று நினைப்பார்களேயானால்—மற்ற எல்லோரையும் விட மக்கள் நம்மைத்தான் அறிவாளி — விஷயம் தெரிந்தவர்—உண்மையானவர் என்று நம்பியிருக்கிறார்கள் என்று நினைத்து ஒரு கண நேரம் தம்மை மறந்து அகந்தையிலே மூழ்கிவிட்டார்களேயானால் அதன் விளைவு எவ்வளவு பயங்கரமாக ஒரு நாட்டைத் தாக்கும் என்பதை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

## உங்கள் அறிவும் அனுபவமும் நாட்டின் பொதுச் சொத்து!

''நான் ஒன்றை உங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல்வேறு நேரங்களில் இவைகளை நான் வற்புறுத்திக் கூறியவன் என்றாலும், உங்களுக்கு முன்னால் இதைச் சொல்லுவது மிக மிகத் தேவை என்றே நான் கருதுகின்றேன். நீங்கள் பெற்றிருக்கின்ற ஆற்றல்—





அடைந்திருக்கின்ற அனுபவம்—படித்திருக்கின்ற கலை நுணுக்கங்கள், நுண்ணறிவு இவை அத்தனையும் இந்த நாட்டின் பொதுச்சொத்து என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். ஒரு மனிதன் சம்பாதிக்க உழைக்கின்றான் என்றால், முதலில் தான், தனது குடும்பம் என்று எண்ணுவது இயல்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அந்த மனிதன் செய்கின்ற காரியத்தின் விளைவு, எத்தனை மக்களுடைய வாழ்வுக்கு அடிகோலுகிறது என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அந்த மனிதனுடைய செயலையும், ஆற்றலையும், கடமையுணர்வையும், பொறுப்புணர்வையும் ஒரு நாடு மதிக்கும் என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொண்டவர்களாக இருப்பீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

## நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் !

''ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்றவர்கள் மக்களேதான் என்பது, மக்களாட்சித் தத்துவத்திலே ஒரு முடிவான உண்மைதான் என்றபோதிலும், நடத்தித் தருபவர்கள்—மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு உதவி செய்பவர்கள் உங்களைப் போன்ற பொறுப்பு மிக்கவர்கள்தான் என்பதை இந்த நாடு என்றும் மறக்கக் கூடாது என்பதை நான் பல்வேறு நேரங்களில் கூறியிருக்கிறேன்,

## ஊழியர்கள் என்ற பெயரையே மாற்றி அமைப்போம்!

''இங்கு உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுவதெல்லாம்—இங்கே நண்பர்கள் பேசும் போதும் சொன்னார்கள்—இங்கே இருக்கின்ற உங்களுக்குத் தெரியாத ஒன்றைச் சொல்லுவதற்கு நான் இங்கே வந்திருப்பது போல, 'அவர்கள் நமக்குச் சொல்ல இருக்கின்றார்கள்' என்ற கருத்தை வெளியிட்டார்கள். நாங்கள் இங்கே சொல்ல வரவில்லை. தெரிந்து கொள்ள வந்திருக்கின்றோம். உங்களைப் புரிந்துகொள்ள வரவில்லை. உங்களிடமிருந்து நிலைமைகளைப் புரிந்துகொள்ள வந்திருக்கின்றோம். 'ஊழியர்கள்' என்ற பெயரையே நான் வெறுக்கிறேன், என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். யாருக்கும் யாரும் ஊழியர்களாக இருக்க வேண்டிய நிலை தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதிலே எனக்கு நிச்சயமாக அக்கறை உண்டு. விரைவில் 'ஊழியர்கள்' என்ற பெயரையே மாற்றியமைக்க வேண்டும் என்ற ஆசையிலே நான் இருக்கின்றேன்.

## உங்கள் பொறுப்பு

''இதை நான் சொல்லுவதற்குக்காரணம் இந்த நாட்டிற்காக உழைக்கின்ற நீங்கள் தான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்பது மட்டுமல்ல; கோடிக் கணக்கான தமிழகத் தாய்மார்களின் மானத்தையும், தமிழகக் குழந்தைகளின் எதிர்காலத்தையும், தமிழ்நாட்டின் உயர்வையும் காப்பாற்றி, பேணி வளர்த்து, மற்ற மாநிலங்களில், இன்னும் சொல்லப் போனால் வெளிநாடுகளில், அங்கே இருக்கின்ற ஆன்றோர்கள் அனைவரும் உங்களைப் பார்த்துப் பொறாமைப்பட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள் என்பதை இங்கே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## அண்ணாவின் கொள்கைகள்

''இந்த நாடு யாரை நம்பியிருக்கின்றது? 1967ஆம் ஆண்டு அமரர் பேரறிஞர் அண்ணாவின் கையிலே இந்தத் தமிழகத்தை ஒப்படைத்த நேரத்தில், அண்ணா அவர்கள் சொன்ன தத்துவத்தை—கொள்கையை—இலட்சியத்தை இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பொருத்தமானது என்ற நம்பிக்கையில் — அதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் —மக்கள் உணர்ந்து அந்த நிலைமையை உருவாக்கினார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் மீண்டும் என்னைப் போன்றவர்கள், மக்களிடத்திலே எங்கள் எண்ணங்களைச் சொல்லி, அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகள் நாட்டில் சட்டங்களாக—திட்டங்களாக மாற்றப்பட்டு, அந்தக்கொள்கைகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அமைப்புக்களைச் செவ்வனே—சீராக—நிறுவித் தருகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்கிற நிலைமை தோற்றுவிக்கப்பட்டு, இன்றைய தினம் நாங்கள் வந்திருக்கின்றோம் என்றால் நாங்கள் அமைத்த ஒரு கட்சி தோன்றி ஏறத்தாழ ஐந்தாண்டு காலம் கூட ஆகவில்லை. இந்த இடைக்காலத்தில் நாங்கள் பட்ட துன்பங்கள் எதுவாக இருந்தாலும்—தொல்லைகள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும்—எத்தனையோ இளைஞர்கள் சாவுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருந்தாலும், நாங்கள் அதைப் பற்றி இப்போது பேசவிரும்பவில்லை என்றாலும் ஐந்தாண்டு இடைக்காலத்தில் ஒரு கட்சி தோன்றி, மக்களுடைய அனுதாபத்தைப் பெற்று—ஆதரவைப் பெற்று ஒரு ஆட்சியை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் உங்களுடைய நல்ல உள்ளங்களுக்குச் சில கேள்விகளை வைக்க விரும்புகின்றேன்.

''இந் நிலை ஏன் ஏற்பட்டது? எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது? தமிழக மக்கள், அமரர் பேரறிஞர் அண்ணாவைப் போல் என்னை நம்பிவிட்டார்கள் என்று நான் நினைக்கப்போகிறேனா? சொல்லப் போகிறேனா ? நிச்சயமாகக் கிடையாது! அமரர் பேரறிஞர் அண்ணாவைப் போல நான் ஆட்சி செய்துவிடுவேன், அவ்வளவு திறமையுள்ளவன் என்ற நம்பிக்கை யிருப்பதாக மக்களிடம் சொல்லப் போகிறேனா? இல்லை. ஆனாலும் இந்த மாற்றம் ஐந்தாண்டுக் கால இடைக்காலத்திற்குள் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்றால், மக்கள் அனுபவித்த துன்பங்கள், மக்களுடைய தேவைகள் இந்த நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## எச்சரிக்கையாக எடுத்துக் கொள்கிறேன் !

''நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். நண்பர் ஒருவர் ஒரு கதையையே சொன்னார். என்னைச் சோழனாக்கினார். அவரைக் குந்தவையாக்கிக் கொண்டார். நல்ல வேளை! இங்கும் அந்த வேடங்களைப் போட வேண்டிய அவசி

யம் எங்கள் இருவருக்கும் ஏற்படவில்லை. இங்கே ஏற்படுத்தவும் வேண்டாம் என்று நான் கருதுகிறேன். நான் இதனைச் சொல்லுவதற்குக் காரணம், கோட்டைக்குள் என்ன நடக்கின்றது என்பதைக் கவனிக்காமல் இருக்கின்ற ஆட்சி இருக்கக் கூடாது என்ற பேரார்வத்தில், எனது நண்பர் அவர்கள் அந்தக் கதையை அழகாக எடுத்துச் சொல்லும் பொழுது நான் உண்மையிலேயே பெருமைப் படுகின்றேன்; நல்ல வேளையாக இன்றுதான் முதன் முதலாகக் கோட்டையிலே நான் அடியெடுத்து வைத்திருக்கின்றேன். ஆகவே அந்தக் குற்றச்சாட்டு என்னைப் பாதிக்காது என்பதும், அந்தக் குறைபாடு என்னிடத்தில் இருக்கிறதா, இல்லையா என்பதைச் சோதிப்பதற்கு நாட்கள் இருக்கின்றன என்பதையும் எண்ணிப் பார்க்கும்பொழுது அந்தக் குற்றச்சாட்டு யாருக்கோ, எங்கோ போய்ச் சேருகிறது என்பதோடு நான் திருப்தி அடைந்தாலும், உண்மையில் நான் அதை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்கின்றேன்.

## தொண்டனாக, தோழனாக, நண்பனாக இருப்பேன்!

''நானோ எனது நண்பர்களோ நிச்சயமாக உங்களுடைய குறைகளை ஆராய்வதிலும், உங்களுடைய தொல்லைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவதிலும், உங்களோடு இணைந்து—நான் முதலமைச்சர் என்ற பதவியில் இருந்தாலும்—தோளோடு தோள் நின்று, உங்களுடைய தொண்டனாக—தோழனாக — நண்பனாக இருப்பேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பவேண்டும்.

''இரகசியம் போய்விடாது என்று உத்திரவாதம் கொடுத்தார்கள். நான் சந்தேகிக்கவில்லையே! நீங்கள் ஏன் சொல்லிக் காட்டுகிறீர்கள்? இவ்வளவு அவசரப்பட வேண்டிய தேவை இல்லை. யாரையும் சந்தேகிப்பதற்காக இங்கே நாங்கள் வரவில்லை. நம்பித்தான் வந்திருக்கின்றோம். உங்களது அறிவையும், நாணயத்தையும், ஆற்றலையும், நேர்மையையும் நம்பித்தான் நாங்கள் இந்த ஆட்சியிலே அமருகின்றோமே தவிர, நாங்கள் யாரோ பதினான்கு பேர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு, எல்லாவற்றையும் நாங்களே செய்து முடித்துவிடுவோம்—எல்லா இரகசியத்தையும் நாங்களே வைத்துக் கொள்ளுவோம் என்ற நிலையில் நான் இங்கே வரவில்லை—நண்பர்கள் வரவில்லை. நாங்கள் உங்களை நம்பித்தான் வந்திருக்கின்றோம். எங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளுவது என்றால், எங்களுக்காக அல்ல. உங்களை வாழ **வைக்கின்ற தெய்வங்களாக இருக்கின்ற தமிழ் நாட்டு மக்களுக்காக நீங்கள் நிச்சயமாகத் தொண்டு செய்வீர்கள் என்பது மட்டுமல்ல. அவர்களுக்காக உழைப்பீர்கள் என்ற உத்திரவாதத்தைத் தருகின்ற நேரத்திலே யெல்லாம் உண்மையிலேயே நான் புல்லரித்துப் போனேன் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.**

''இந்த நாடு யாரை நம்பியிருக்கிறது? ஐந்தாண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் அல்லது ஓராண்டுக்காலம் அல்லது பத்தாண்டுக் காலம் அல்லது ஏழாண்டுக் காலம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த இடைக்காலத்தில் வந்து போகின்ற அமைச்சர்களை மட்டும் நம்பியா இந்த நாடு இருக்கிறது? மனிதனுடைய ஆயுள் எவ்வளவு என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் நாமிருக்கின்றோம். வேலையை விட்டு வீடு திரும்பும்போது ஒரு பத்தாயிரம் ரூபாய் கிடைக்காதா? கையிலே கொண்டு போகமாட்டோமா! எனக் கேட்கின்ற அளவிலேதான் மக்களுக்குத் தொண்டு செய்கின்ற நீங்கள் இருக்கின்றீர்கள் என்று நண்பர்கள் எடுத்துக் காட்டுகின்ற சூழ்நிலை உள்ளது. இந்த நாட்டில் எவ்வளவுதான் தேவைகள்—எவ்வளவுதான் நல்ல எண்ணங்கள்—எவ்வளவுதான் சூழ்நிலைகள் உதவினாலும், வற்புறுத்தப்பட்டாலும் எந்த ஒரு அரசியல் கட்சியாலும் தனிமையில், அல்லது சில அமைச்சர்களால் அல்லது ஆயிரக்கணக்கான நண்பர்களால், தொண்டர்களால், ஒரு கட்சியினுடைய அமைப்புக்களால் நிச்சயமாக எதையும் சாதித்து விட முடியாது என்பதை நான் இங்கே திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். ஒன்றைச் சாதிக்க முடியும். அரசியல் கட்சிகள் அவ்வப்போது தங்களுடைய எண்ணங்களை மக்களிடம் சொல்லி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்ற—சூழ்நிலையைச் சாதகமாக உருவாக்குகின்ற—திறமையுள்ளவர்கள் வேண்டுமானால் சில நேரங்களில் சில சமயங்களில் வெற்றி பெற்றதாக ஒரு தோற்றத்தை உலகத்திலே தோற்றுவிக்க அவர்களால் முடியுமே தவிர, **எந்த அரசியல் கட்சியும் நுண்ணறிவு படைத்தவர்களுடைய—திட்டமிட்டுத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஆற்றல் படைத்தவர்களுடைய ஒத்துழைப்பில்லாமல் எந்தக் காரியத்தையும் சாதித்து விட முடியாது என்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதை நான் நன்கு உணர்ந்தவன்.**

## யாருக்காக இங்கே வந்திருக்கிறோம் என்பதை மறந்திடமாட்டோம்!

''அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலே இருந்தபொழுது, சிறு சேமிப்புத் துணைத் தலைவராக நான் இருந்த நேரத்தில் நான் எழுதியவை கோப்புகளில் உள்ளன. அந்தக் கோப்புகளை எடுத்துப் பார்ப்பீர்களானால் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். அவற்றிலே பிரச்சினைகள் வரும்பொழுது, பல இடங்களில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். 'எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் தவறு செய்திருந்தால் தயவுசெய்து கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்' என்று நான் கோப்புகளில் எழுதியவை, பேரறிஞர் அண்ணா அவர்களிடம் குறையாகக் கொண்டு போய்க் காட்டப்பட்டதுண்டு. அவர்கள் என்னை அழைத்துப் பாராட்டியதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இதைச் சொல்லுவதற்குக் காரணம், நாம் யாருக்காக இங்கேவந்திருக்கின்றோம்என்பதை நாங்கள் என்றும் மறந்து விடமாட்டோம்.

**''தமிழகத்திலே உள்ள யாரோ ஒரு குடும்பம்—யாரோ ஒரு தனி மனிதர், எங்கோ கஷ்டப்பட்டால் நமக்கு என்ன என்று நினைக்கின்ற மனநிலை—அலட்சியம்—அந்த சுயநலம்—யாருக்கும் வந்துவிடக் கூடாது என்பதிலே நாங்கள் மிக மிக**

**எச்சரிக்கையாக இருப்போம் என்பதைத் தெளிவு படுத்த வேண்டியது என்னுடைய நீங்காத கடமையாகக் கருதுகின்றேன்.**

## திரித்துக் கூறினார்கள்!

''நாடாளுமன்றத் தேர்தலின்போது சென்னையிலே நான் ஒரு செய்தியினை வெளியிட்டேன். அதை நண்பர்கள் பத்திரிகைகளிலே திரித்துக் கூறினார்கள். நாடாளுமன்றத் தேர்தலையொட்டித் தமிழகத்தைச் சுற்றி வந்தபொழுது—அதற்கு முன் பல கூட்டங்களில் பேசுவதற்கும், வாக்குகளைக் கேட்பதற்குமாக மக்களைச் சந்தித்ததுண்டு. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலின்போது—நான் சுற்றியது போல—மக்களைச் சந்தித்தது போல நான் சென்ற இடங்களில் கண்டது அதுதான் முதல் தடவை என்பதிலே நீங்கள் நம்பிக்கை வைத்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்டறிந்து வந்த பிறகுதான், நான் தியாகராய நகரிலே பேசும்பொழுது தெளிவாகச் சொன்னேன். '500 ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர்கள், தனக்கு இன்னொரு ஐந்தோ, பத்தோ வேண்டுமெனக் கேட்கும்பொழுது, அந்த 500 ரூபாய் கூடக் கிடைக்காமல் இருக்கின்ற மக்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்' என்று நான் சொன்னதைத் திரித்துக் கூறி, 500 ரூபாய்க்கு மேல் யாருக்கும் சம்பளமே கொடுக்கக்கூடாது என்று எம். ஜி. ஆர். சொல்லுகிறார் எனப் பிரச்சாரம் செய்தார்கள். இது எத்தனை நாட்களுக்கு நிற்கும்? நாடாளுமன்றத் தேர்தலோடு அந்தப் பிரச்சினை முடிந்தது. பிறகு சட்டமன்றத் தேர்தல் வந்தது. நிலைமைகளை நாம் கண்கூடாகக் கண்டோம்.

## கிராமங்களில் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லை!

''இவைகளை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், யார் எவ்வளவு நல்ல திட்டங்களைத் தீட்டினார்கள் அல்லது தீட்டவில்லை என்பது பற்றி இங்கே பிரச்சார மேடையாக்க நான் விரும்பவில்லை. யாரையும் குறை கூறி மகிழ்வதற்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லை. ஒன்றைச் சொல்லுவேன். தயவுசெய்து இங்கே இருக்கின்ற அதிகாரிகளாகிய நீங்கள் எவ்வளவு அழகாகத் திட்டங்களைத் தீட்டியிருந்தாலும் அல்லது தீட்டுவதற்கு முற்பட்டிருந்தாலும் **தமிழகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பாலான கிராமங்களில, 'குடிநீர் இல்லை! குடிநீர் இல்லை' என்ற பிரசசினை இருக்கிறது என்பதைத் தயவுசெய்து நீங்கள் அலட்சியப்படுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்த ஒன்றை மட்டும் இங்கே நான் வெளியிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். குடிப்பதற்குத் தண்ணீர்தான் கேட்கின்றார்கள். நல்ல தண்ணீர்தான் அவர்களுக்குத் தேவை. எங்கு போனாலும் இந்தக் குறை இல்லாமல் இல்லை.**

'நான் வெற்றி பெற்று வந்த தொகுதி அருப்புக்கோட்டைஎன்பதற்காகப்பேசவில்லை. இத்தனை ஆண்டுகளாக ஆட்சி செய்திருக்கின்றோம். சுதந்திரம் கிடைத்துவிட்டது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகும், ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அந்த மாவட்டம் ஆண்டுக்கொரு முறை பஞ்சத்திற்குச் சொந்தமாகிறது. பஞ்சம் ஏற்படுகிறது என்றால் அதைப் பற்றி முடிவு செய்ய வேண்டாமா? யார் சிந்திக்க வேண்டும்? அரசியல்வாதிகள் சிந்தித்தால் மட்டும் போதாது; அரசியல்வாதிகள் அங்கே வாக்குறுதிகள் கொடுக்கலாம். நாங்கள் பதவிக்குச் சென்றால் இதை நிறைவேற்றலாம் என்றிருக்கிறோம் எனச் சொல்லலாம். நிறைவேற்றித் தருபவர்கள்—அதை ஒழுங்குபடுத்திச் சீராக வெற்றி பெறச் செய்பவர்கள் நீங்கள்தான் என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை என்பதையும், நன்றாகப் புரிந்து கொண்டுள்ளோம் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்ள வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன்.

## நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டாமா?

''அங்கே இருப்பவர்கள் குடிநீரில்லாது கஷ்டப்படுகிறார்கள். தர்மபுரி மாவட்டமும் அப்படித்தான். திருச்சியிலே பல இடங்களிலேயும் அப்படித்தான். இப்படிப்பட்ட கொடுமைகள் நாட்டில் இன்னமும் இருக்கின்றன. ஏறத்தாழ 500 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று நிதி நிலை அறிக்கையிலே நாம் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. இவைகளுக்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை, மனச்சாட்சியுள்ள நாம், நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டாமா? இந்த உணர்வில் சொன்னதை இப்படித் திரித்துக் கூற முற்படுகிறார்கள் என்றால்—நான் வேதனையோடு சொல்வேன்—இப்படிப்பட்ட அரசியலைகவனிக்காமல் ஒதுக்க வேண்டியது உங்களுடைய கடமை என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

## அரசியல் குறுக்கீடு கூடாது!

''இங்கே ஒரு நண்பர் சொன்னார். நாங்கள் எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமல்ல என்றார். மன்னிக்க வேண்டும். அரசியல் கொள்கைகளைத் த்ங்கள் கொள்கையாக ஏற்றுக் கொள்வது யாருக்கும் உரிமையுள்ள ஒன்று. நான் அதில் தலையிட மாட்டேன் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அவரவர்களுக்குச் சில நம்பிக்கைகள் இருக்கலாம், அவரவர்களுக்குச் சில கொள்கைகளில் பிடித்தம் இருக்கலாம். அவரவர்களுக்குச் சில செயல்களிலே இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற நம்பிக்கை இருக்கலாம். அதிலே நான் குறுக்கிடவில்லை. குறுக்கிட மாட்டேன். அது அவர்களுடைய பிறப்புரிமை. வாக்குகள் அளிப்பதற்கு, ஒரு மனிதனுக்குச் சுதந்தரமிருக்கிறதென்றால், 'யாருக்கு வாக்களிப்பது? எதற்காக வாக்களிப்பது?' என்பதைப் புரிந்து கொள்ள அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று சொல்லுவது நியாயமல்ல என்று நான் கருதுகிறேன். **ஆனால் நாலரைக் கோடி தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது எந்த அரசியலும் குறுக்கிட்டுவிடக் கூடாது என்பது ஒன்றுதான் எனது அக்கறையே தவிர, வேறு எதுவுமல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்வேன்.**

"இந்தச் சாதிக்காக ஒன்று—இந்த மதத்திற்காக ஒன்று—இந்தப் பிரிவுக்காக ஒன்று என்ற நிலைமையை நாம் ஏற்படுத்துவோமானல் — சிந்திப்போமானல் — நம்முடைய அறிவு, நேர்மை, உழைப்பு, நம்முடைய திறமை, நல்ல எண்ணம் ஆகியவை வீணுகிவிடும்] என்ற அச்சம் எனக்கு நிறைய உண்டு. ஆகவே நாம் அதற்கெல்லாம் அப்பாற்பட்டு, ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய கட்டாயம் இன்று நாட்டிலே உருவாக்கப்பட்டு இருக்கிறது.

## உங்கள் ஆற்றலுக்கு விலை நிர்ணயிக்க முடியுமா ?

"ஒன்றை உங்களிடம் சொல்வேன். நிதிநிலை அறிக்கையை உங்களுக்குத் தெரியாமல் வெளியிடப் போவதில்லை. உங்களுக்குத் தெரிந்து, நீங்கள் தருகின்ற திட்டங்களின் வழியாக—எங்கள் ஆசைகளை நிறைவேற்ற எப்படி உருவாக்கி வகுத்துத் தருகின்றீர்களோ அதற்கேற்ப, நிதிநிலை அறிக்கை உருவாக்கப்படும் என்பது—என்னைவிட உங்களுக்கு நன்ருகத் தெரியும். உங்களுக்குத் தெரியாமல் நாங்கள் எதற்காகவும் தனியாகப் பிரித்துப் பார்த்து ஒதுக்கிவிட முடியாது. இந்த நேரத்தில், ஆறு மாதங்கள் கழிந்த பிறகு எப்படி நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறதென்பதும், தமிழகத்தின் நிதிநிலை எப்படி இருக்கிறது என்பதும் உங்களுக்கு மிக மிக நன்ருகத் தெரியும். இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைச் சொல்லுவேன். என் நண்பர்களைப் பற்றிய உறுதியோடு நான் சொல்லுவேன். **உங்களுக்குத் தேவையானவற்றை—உங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை—உங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்திற்கு உத்திரவாதமளிக்கக் கூடிய சூழ்நிலையை—உங்களுடைய உழைப்புக்கும் தகுதிக்கும் ஏற்ப யாரும் உங்களுடைய ஆற்றலுக்கு விலை நிர்ணயித்து விட முடியாது என்பது எனக்குப் புரிந்த ஒன்ருகும்.** ஏனென்னில், ஒரு நாட்டின் தலைவிதி உங்கள் கையிலே இருக்கிறது. அதற்கு யார் சம்பளத்தை நிர்ணயிப்பது? இவ்வளவுதான் என்று வரையறுக்க முடியுமா? ஒரு நாட்டை உயர்த்தி, வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து மக்களைக் காப்பாற்றி, குடிநீர் கொடுத்து, விவசாயிகளுக்கும், உழைக்கும் வர்க்கத்துக்கும் பாதுகாப்புத் தந்து, மேம்படுத்தக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கக்கூடிய உங்களுடைய உழைப்புக்கு 'இதுதான் சம்பளம்—இதுதான் விதி—இவ்வளவுதான் வரையறை' என்பதை யாராவது நிர்ணயிக்க முடியும் என்று சொன்னல், நான் நிச்சயமாக அதை, யார் சொன்னலும், ஒப்புக் கொள்ள மாட்டேன்.

"ஒரு நாட்டை வாழ்விக்கின்றவர்களுடைய வாழ்க்கை நிச்சயமாகப் பாதுகாப்போடு அமைய வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

## வீட்டிலே வறுமையைச் சந்தித்துவிட்டு வந்து ஏழைமக்களுக்கு வாழ்வு கேட்கிறீர்கள்!

"நிதியமைச்சராக சி. எஸ். அவர்கள் இருந்த சமயம் பேசியபோது குறிப்பிட்டிருந்தேன். ஆசிரியர் ஒருவர், பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வரும் பொழுது, வீட்டிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை வாழ்க்கைத் துணைவியோ அல்லது உடன் பிறப்புக்களோ சொல்லி அந்த வேதனையோடு அங்கே வந்து அந்தச் சிந்தனையில் மூழ்கியிருக்கின்ற ஒரு ஆசிரியர், எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டிய ஒரு மாணவனை, எப்படிச் சரியான பாதையில் உருவாக்க முடியும்—அவனுக்கு அறிவு தரமுடியும் என்ற கேள்வியை நான் அங்கே வைத்தேன். அப்போது சி. எஸ். கல்வி அமைச்சராகவும் இருந்தார். அதைப் போல் நான் உணருகின்றவன். வீட்டிலே வறுமையைச் சந்தித்து விட்டு வந்து, இங்கே ஏழைகள் வாழ்வு மலர வேண்டுமென்று திட்டம் போடுகின்ற உங்களை, 'ஏழை மக்களுக்கு வாழ்வு கொடுங்கள்' என்று கேட்க இந்த நாட்டில் யாருக்கும் உரிமையில்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

## திட்டம் தீட்டுகிற முறைகளை மாற்றியமைக்க வேண்டும் !

"அந்த வகையில், எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் வேறுபாடின்றி, எங்கள் உள்ளத்திலே வேறு ஏதாவது எண்ணத்தை வைத்துக் கொண்டு, மீண்டும் சொல்கிறேன்—நாங்கள் சந்தேகத்தோடு வரவில்லை. நம்பிக்கையோடு வந்திருக்கிறேம். யாரையும் சந்தேகிக்கவில்லை. உங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறேம். அந்த வகையில் சொல்லுகின்றேன். இருக்கின்ற பிரச்சினையும், பொறுப்பும் மிக மிக மகத்தானதாகும். நீங்கள் அறியாதது அல்ல. நாட்டு மக்கள் சதவிகிதத்தை எடுத்துக் கொண்டால், எத்தனை பேர் படித்து வேலையில்லாத் திண்டாட்டத்திலே இருக்கிருர்கள் என்பதை நீங்கள் கணக்கிட்டு வைத்திருப்பீர்கள். அவர்களுக்கு எப்படி வேலைகொடுப்பது என்கின்ற பிரச்சினை, வேலை கொடுத்தாலும் அவர்களுக்குத் தேவையான வருமானம் எவ்வளவு கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்ற பிரச்சினை, தாய்க் குலத்துக்குச் சொத்துரிமை இல்லாத பிரச்சினை, இப்படி ஒவ்வொரு பிரச்சினையையும்—மாணவர் நலனை எடுத்துக் கொண்டால்—சாதிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால்—இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்துவது எளிதான காரியமல்ல. எத்தனையோ பேர் முயற்சித்து, 'செய்துவிட்டோம், செய்துவிட்டோம்' என்று புள்ளி விவரங்கள் கொடுக்க முடிந்திருக்கின்றதே தவிர, நான் குறிப்பிட்டதைப் போல—நான் இங்கே பட்டியல் கொண்டு வந்துள்ளேன்—எந்தெந்த ஊரில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை வைத்துப் பார்ப்பீர்களானல், **உண்மையிலேயே நாம் உழைத்தது போதாது என்பதையும், நீங்கள் திட்டம் தீட்டவேண்டிய முறைகளையே மாற்றியமைத்தாக வேண்டும் என்பதையும், வேறு கண்ணேட்டத்தில் திட்டங்**

களை உருவாக்க நீங்கள் முன் வரவேண்டுமென்பதையும், இந்த நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு நீங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும், தயவுசெய்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென நான் விரும்பி வேண்டிக் கொள்கிறேன். அந்த நிலை உருவாகியிருக்கிறது.

## திட்டங்களின் அடிப்படையிலேயே மாற்றம் காணவேண்டும்!

''பொருளாதாரத் திட்டங்கள்—பொருளாதார அமைப்புக்கள்—அதனால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி இது வரை எல்லோரும் பேசியுள்ளார்கள். பணக்காரன் பணக்காரனாகி விட்டான். ஏழை ஏழையாகி விட்டான். முன்பு டாட்டா முன்னால் நின்றார். இப்போது பிர்லா முன்னால் வந்துவிட்டார். முன்பு 600 கோடி அவருக்கிருந்தது. இப்போது 900 கோடி இவருக்கு வந்திருக்கிறது. இப்படிச் சொல்லுகிறார்கள். **திட்டங்கள் தீட்டியதிலே தவறுகள் இல்லை. தீட்டுகின்ற திறமையாளர்களுக்கு எந்த எண்ணத்தின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டவேண்டுமென்று சொல்லத் தவறிவிட்டார்கள் என்ற நிலைமையைப் பெரியவர்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.** ஆகவே, நான் வேண்டுகோளாக வைக்கின்றேன். நீங்கள் நிதிநிலை அறிக்கையைத் தரும்போதோ மற்ற திட்டங்களை உருவாக்கும் போதோ, இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடிப்படையிலேயே நாம் மாற்றத்தைக் கண்டாக வேண்டும். பொருளாதார அடிப்படையில் நாம் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கினால் அன்றி இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு காண இயலாது. நல்ல ஏற்பாட்டைச் செய்து நாம் முன்னேற முடியாது என்ற அச்சமும் அவநம்பிக்கையும் கூட எனக்கு இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். இவற்றையெல்லாம் நாங்கள் யாரிடம் ஒப்படைக்கப் போகிறோம்? யாரை நம்பி நிறைவேற்றப் போகின்றோம்? உங்களை நம்பித்தான்! எங்களுக்கு வேறு வழியில்லை. உங்களைத்தான் நாங்கள் நம்பியிருக்கின்றோம். நீங்கள்தான் தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல முடிவைச் செய்து தரவேண்டும். நீங்கள் நினைத்தால் செய்து தரமுடியும். நீங்கள் உட்கார்ந்து பேச வேண்டுமென்பது என் விருப்பம்.

## எங்களையும் நீங்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும்!

"இங்கே சொன்னார்கள்; இரண்டு அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறை எங்களையெல்லாம் சந்தித்து நாங்கள் எப்படியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அதோடு நான் ஒன்று சொல்லுவேன். நீங்களும் எங்களைப் பார்த்து நாங்கள் எப்படி யிருக்கிறோம் என்பதையும் கவனிக்க வேண்டும். அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

## தமிழகத்தை உயர்த்த உதவுங்கள்!

''அந்த நிலைமையில் நான் சொல்ல விரும்புவது ஒன்று. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து—பதவி என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர—நாம் எல்லோரும் மனிதர்கள் தான். எல்லோரும் ஓர் குலம்தான். எல்லோரும் ஓரினம்தான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற எங்கள் அமரர் அண்ணாவின் கொள்கை அடிப்படையில் நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, எதையும் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன்.

**"நாம் வேறுபாடு காணாத வகையில், வேற்று எண்ணங்களுக்கு அடிமையாகாமல், சிந்தை குலையாமல், சஞ்சலத்திற்கு ஆட்பட்டு விடாமல் செயல்படுகிற முடிவுக்கு நாம் வருவோமேயானால், நிச்சயமாக மற்ற மாநிலங்களைவிட தமிழகம் உயர்ந்திருக்கிறது—தமிழக மக்கள் நல்வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை ஐந்தாண்டுக் காலத்திற்குள் இந்தியத் துணைக் கண்டத்திற்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.** அந்த மாற்றத்தைச் செய்ய நீங்கள் துணை புரியவேண்டும். பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையிலேயே மாற்றியமைக்க நீங்கள் எனக்கு உதவ வேண்டும்.

## உங்கள் பக்கம் இருப்பேன்!

''நாங்கள் எடுத்துக் கொடுத்து, 'நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லுவதைவிட நீங்கள் எடுத்துக் கொண்டு மிச்சத்தை மக்களுக்குத் தாருங்கள்' என்று சொல்லுகிற அளவுக்கு இங்கே நான் துணிவு படைத்தவனாக இருக்கின்றேன். நீங்கள் கணக்கிட்டுத் தீர்ப்புச் சொல்லுங்கள். மக்களுக்கு எவ்வளவு கொடுக்கலாம், நாம் எவ்வளவு எடுத்துக் கொள்ளலாம் என்பதை நீங்கள் சிந்தியுங்கள். நான் குறுக்கே வரவில்லை. நிச்சயமாக வர மாட்டேன். தடை சொல்லவே மாட்டேன். நீங்கள் உறுதியாக நம்பலாம். இத்தனை கோடி ரூபாய்களை வரியாகப் பெறுகின்றோம். அதில் மக்களுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவு செய்கின்றோம்? நாம் எவ்வளவு எடுத்துக் கொள்ளுகின்றோம்? இப்படிக் கணக்கிட்டுப் பார்த்து, உங்களுக்குத் தேவை எவ்வளவு என்று விரும்புகின்றீர்களோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லுவேன். நீங்கள் விரும்பினால் நிறையப் பலனை உண்டாக்க முடியும். வருகின்ற வரிப் பணம் போதாது என்றால், உங்களால் நிறைய—மக்கள் கஷ்டப்படாத வகையில் வரியை விதித்து அல்லது வரியைப் பெறுகின்ற வகையில் உங்களால் நிலைமையை உருவாக்கித் தர முடியும். தமிழகத்திலே உள்ள எத்தனையோ அதிகாரிகள் இதில் பங்கு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசுக்கு வர வேண்டிய உண்மையான வரி, நான் வெளியிலேயிருந்து கவனித்த வரையில் ஏறத்தாழ 70 அல்லது 80 கோடி ரூபாய்கள் நேரிடையாக அரசுக்கு வராமல் அங்கங்கே சிதறிப் போகின்றன என்பதை உங்களுக்கு நான் சொல்லிக் காட்ட வேண்டியவனாக இருக்கின்

றேன். நீங்கள், ஒழுங்காக வரியைப் பெறக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யக் கூடிய துணிவை, நீங்கள் தாட்சண்யமின்றி நடந்து, வரியைப் பெற முயற்சிப்பீர்களேயானால், முன் வருவீர்களேயானால் எந்தக் குறையும் உங்களுக்கு இல்லாத வகையில் என்னால் உங்களுக்கு நிச்சயமாகத் தொண்டு செய்ய முடியும். நான் உங்கள் பக்கம் இருப்பேன் என்பதைத் தயவு செய்து நம்பலாம்.

''இப்படிச் சொல்வதால், ''என்ன? முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரை பின்னால் பார்த்தால் முதலியார் குதிரை'' என்று சாட்சி சொன்னது போல், 'இங்கேயும் இல்லாமல், அங்கேயும் இல்லாமல் இருப்பதை எல்லாம் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்,' என்கிறார்; 'வரியை வாங்கிக் கொடுங்கள்' என்கிறார்; இப்படி சொல்லிவிட்டுப் போகிறாரே''என்று தவறாகக் கருத வேண்டாம்.

**நிச்சயமாக உங்களுக்காக, உங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் இருக்கின்றோம். அதைச் செய்வதற்கு நாங்கள் முயலுவோம்** என்பதை, நிச்சயமாக —உளப்பூர்வமாக—நாங்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொள்வோம் என்று சொல்லுகின்ற **நேரத்தில் இறுதியாக ஒன்றைக் கூறுகின்றேன்!**

## சிந்தித்துப் பாருங்கள்!

''தமிழக மக்கள் பொறுமையற்றிருக்கின்றார்கள். கிராமப்புறப் பகுதிகளுக்கும் மற்ற இடங்களுக்கும் போனால் மக்கள் வேதனைகளைச் சொல்லிச் சொல்லிச் சோர்ந்து போய் இருக்கிறார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து —சகிக்க முடியாத நிலைமைக்கு ஆளாகி — அதன் விளைவாக ஏற்படுகின்ற ஆத்திரம், வெறுப்பு சமூகத்தின் மேலேயே ஒரு அருவருப்பு இதன் காரணமாகத் தோன்றுகின்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

## புதிய முறையில் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்குவோம்!

''நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே மட்டுமல்ல. இந்தியத் துணைக் கண்டம் எப்படியிருக்கிறது என்பதை நான் சொல்வது தவறு என்றாலும், வேதனையில் இருப்பவர்கள், விரக்தி நிலைக்குப் போகின்றவர்கள், வெறுப்பு நிலைக்குச் சென்று வெறி நிலைக்கு மாறுவார்கள் என்றால் இந்த நாடு எவ்வளவு கொடுமையைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்பதைத் தயவுசெய்து நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஆகவே, நாம் புதியமுறையில் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கி, அடிப்படையிலேயே நாம் மக்களுக்குச் செய்ய வேண்டிய அவசியத் தேவைகளை நிறைவேற்றித் தரும் மாபெரும் பொறுப்பை நிறைவேற்றினால்தான் —கொஞ்சமாவது நிறைவேற்றினால் இப்படிப் பட்டவர்களைத் தோற்றுவிக்காமல் தடுக்க முடியுமே தவிர, வெறும் சட்டமும், பிரச்சாரமும் மக்களுடைய தூண்டுதலைத் தடுக்க முடியா விட்டாலும் அல்லது போலீசை வைத்துக் கொண்டு இவர்களைத் தடுத்து விடலாம் என்று நினைத்தாலும், நீண்ட நாட்களுக்கு அது தொடர்ந்து நடைபெறுமா என்பதிலே எனக்கு அச்சமிருக்கின்றது.

''நான் பொறுப்பேற்றிருக்கின்ற நிலைமையில் இதைச் சொல்ல வேண்டியது என் நீங்காத கடமை—மனத்தில் எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது என் கருத்து. ஆகவே சமுதாயத்தை, தமிழகத்தை காப்பாற்றி, எந்த ஒரு அழிவுப் பாதைக்கும் இளைஞர்களை இழுத்துச் செல்வதற்கு மற்றவர்கள் வாய்ப்புத் தராமல், தடைபோட வேண்டிய அறிவால், ஆற்றலால், திட்டங்களால் நிறைவேற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை —நம்மிடம் தமிழக மக்கள் இந்த '77ஆம் ஆண்டில் ஒப்படைத்திருக்கிறார்கள்.

''நண்பர் சொன்னார். அது 1967. இது 1977 என்றார். அன்றைக்கு அறிஞர் அண்ணா இருந்தார்கள். நான் சாதாரண ஒருவன். ஆனால் எண்ண அலைகள், குமுறல்கள், மக்களுடைய உள்ளத்தில் எப்படியிருக்கின்றன என்பதை மட்டும் நிச்சயமாக என்னால் சரியாகப் பிரதிபலிக்க முடியும்.

## வெற்றி பெறுவோம்!

''அவைகளை மட்டும் நீங்கள் உணர்ந்து எங்களுக்கு உதவி செய்வீர்களேயானால், உண்மையிலேயே சொல்லுகிறேன், **எதிர்காலம் உங்களுக்கு வரலாற்றிலே இடத்தைத் தந்து உங்களைப் போற்றும், புகழும்; என்றும் தமிழகம் உங்களை மறக்காது** என்பதைச் சொல்லி, இன்று இதுபோதும் என்ற நிலையோடு நான் நிறுத்திக் கொண்டு, உங்களுக்குத் தொண்டனாக இருப்பேன், தோழனாக இருப்பேன். உங்களுடைய எண்ணத்தை எந்த அளவு பிரதிபலிக்க முடியுமோ அதை நிறைவேற்ற நாங்கள் நிச்சயமாக முயல்வோம் என்பதை மீண்டும் கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த தலைமைச் செயலருக்கும், நண்பர்களுக்கும், பொறுமையாக இருக்கின்ற உங்களுக்கும் நன்றி கூறி, **நாம் தொடர்ந்து பணியாற்றி தமிழகத்திலே ஒரு புதுமலர்ச்சியை ஏற்படுத்த முயன்று வெற்றி பெறுவோம்** என்ற என் ஆவலையும், நம்பிக்கையையும் தெரிவித்துக்கொண்டு, உங்கள் நல்ல உள்ளங்களுக்கு வணக்கம் கூறி, அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.''

**[தமிழ்நாடு தலைமைச் செயலக அதிகாரிகள் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம் ஆகியவற்றின் சார்பாக 30-6-77 அன்று மாலை தலைமைச் செயலகத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகள்]**

# அமைச்சர்கள் பொறுப்பு ஏற்கும் துறைகள்

## திரு எம். ஜி. இராமச்சந்திரன்
*முதலமைச்சர்*

(பொது, பொது நிருவாகம், ஐ.சி.எஸ். மற்றும் ஐ.ஏ.எஸ். அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவலர், தேர்தல் பாஸ்போர்ட், மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழிற்சாலை.)

---

## திரு கி. மனோகரன்
*நிதியமைச்சர்*

(நிதி, திட்டம், வணிக வரி, ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.)

## திரு. ச. இராமச்சந்திரன்
*பொதுப்பணித்துறை அமைச்சர்*

(பொதுப்பணித் துறை, சிறப்புச் சிறு பாசனத் திட்டப் பணிகள் உள்ளிட்ட சிறு பாசனத் திட்டம், சுரங்கம், கனிப் பொருள்கள், இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.)

---

## திரு கே. நாராயணசாமி முதலியார்
*சட்ட அமைச்சர்*

(சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடை மற்றும் அளவைகள் பற்றிய சட்டம், கடன் கொடுத்தல் பற்றிய சட்டம், சீட்டு நிதி பற்றிய சட்டம், கம்பெனிகள் பதிவு.)

## திரு ஜி. ஆர். எட்மண்ட்
*உணவு அமைச்சர்*

(உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம்.)

---

## திரு ஆர். எம். வீரப்பன்
*செய்தி மக்கள் தொடர்புத்துறை அமைச்சர்*

(செய்தி மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில்நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.)

---

## திரு சி. அரங்கநாயகம்
*கல்வி அமைச்சர்*

(கல்வி, தொழில்நுட்பக் கல்வி, ஆட்சி மொழி, சீர்திருத்தப் பள்ளி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி.)

## திரு கே. காளிமுத்து
*உள்ளாட்சித்துறை அமைச்சர்*

(நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், கிராமத் தொழில், கிராமப்புறத் தொழில் திட்டம், கிராமப்புறக் கடன்கள்.)

---

## திரு எஸ். இராகவானந்தம்
*தொழிலாளர்நலத்துறை அமைச்சர்*

(தொழிலாளர் நலம், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளியியல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர் அமைப்பு.)

---

## திரு பி. சௌந்தர பாண்டியன்
*அரிசன நலத்துறை அமைச்சர்*

(அரிசன நலம், பிற்பட்டோர் நலம், எழுது பொருள் மற்றும் அச்சகத்துறை, அரசினர் அச்சகம், மலைவாழ் ஆதிவாசிகள் நலம்.)

---

## திரு சி. பொன்னையன்
*போக்குவரத்துத்துறை அமைச்சர்*

(போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துகள், மோட்டார் வாகன வரி, நெடுஞ்சாலை, துறைமுகங்கள்.)

---

## செல்வி பி. டி. சரஸ்வதி
*சமூகநலத்துறை அமைச்சர்*

(மகளிர், சிறுவர் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர் இல்லம், அனாதை இல்லங்கள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.)

## திரு ப. குழந்தைவேலு
*வேளாண்மை அமைச்சர்*

(வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் —தொழில் பிரிவு, பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.)

## திரு. கே. இராஜா முகமது
*கைத்தறித்துறை அமைச்சர்*

(இடவசதிக் கட்டுப்பாடு, இணையங்கள் உள்ளிட்ட வட்டார, மாவட்ட, மாநில மட்ட சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்போர்டு, நெவுத் தொழில், நூல், கைத்தறி.)

# உணவில் காய் கனிகள்

நாம் அறிவோடும், ஆற்றலோடும் வலிவோடும், வனப்போடும் விளங்க வேண்டுமானுல், நாள் தோறும் சத்து நிறைந்த சமச்சீர் உணவைச் சாப்பிட வேண்டும். சத்து நிறைந்த சீரான உண்வில் காய்கறிகள், பழங்கள் ஆகியவை போதிய அளவில் இடம் பெறவேண்டும். ஆகவே, இவற்றைப் பயிரிடுவதன் அவசியத்தை எவ்வளவு வலியுறுத்திஞலும் மிகையாகாது. சாதாரண வருவாயுள்ளவர்கள் கூட வாங்கக் கூடிய அளவிற்குப் பழம் மற்றும் காய்கற்களின் உற்பத்தியைப் பெருக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக அந்தந்தப் பருவத்திற்கான பழங்கள், காய்கறிகளேப் பயிரிடுதல் மிகவும் அவசியம்.

அநேக, பழங்கள், அவற்றின் காலத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன. பொதுவாக எல்லாப் பழங்களுமே 'வைட்டமின்-சி' சத்து நிறைந்தவை.

மாம்பழம், பப்பாளிப்பழம் ஆகியவற்றில் 'வைட்டமின்-ஏ' பெருமளவில் இருக்கிறது.


தக்காளிப் பழம், நாரத்தை வகையைச் சேர்ந்த பழங்கள், கொய்யா, பப்பாளி ஆகியவை 'வைட்டமின்-சி' நிறைந்தவை.

உலர்ந்த திராட்சை, பேரீச்சை ஆகியவற்றில் பெருமளவுக்கு இரும்புச் சத்து உள்ளது.

ஆப்பிள், பச்சைத் திராட்சை, மாதுளே போன்ற விலேயுயர்ந்த பழங்களேவிட, மாம்பழம், பப்பாளி, வாழை, கொய்யா, தக்காளி ஆகிய பழங்களில் அதிசயிக்கத்தக்க அளவுக்கு, அதிகமான வைட்டமின்களும், தாது உப்புக்களும் நிறைந்திருக்கின்றன. மாம்பழம், பப்பாளி, வாழை, கொய்யா, தக்காளி ஆகிய பழங்கள் அவற்றின் பருவங்களில் ஏராளமாகவும் கிடைக்கின்றன.


**வைட்டமின்களும், தாது உப்புக்களும்**


வேண்டுமான அளவிற்கு 'வைட்டமின்-ஏ' பெற, போதுமான கீரை வகைகள், காரட், தக்காளி ஆகியவைகளே உட்கொள்வதே சுலபமான-அதிகச் செலவில்லாத-வழியாகும். நம் நாட்டில் 'வைட்டமின்-ஏ' பற்ருக்குறை மிகவும் சாதாரணம். வளர்ச்சிக் குறைவு, மாலேக்கண் ஆகியவை இப்பற்ருக்குறையின் விளேவே. மேலும் இப் பற்ருக்குறையுள்ளவர்களே எளிதில்



நோயும் பீடிக்கும். ஆகையால், இந்த முக்கியமான வைட்டமின்களைத் தேவையான அளவிற்கு உட்கொள்ள வேண்டியது அவசியம்.

அழகான தோல், கெட்டியான ஈறுகள், தெளிவான கண்கள், பொதுவாக ஆரோக்கியமான தோற்றம் ஆகியவற்றிற்கு 'வைட்டமின்-சி' மிகவும் அவசியமானது. இந்த வைட்டமின் புதிய பழங்கள், காய்கறிகள்-முக்கியமாக கீரை வகைகள்-ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது. சர்வ சாதாரணமான-மலிவாகக் கிடைக்கக் கூடிய-நெல்லிக்காயில் 'வைட்டமின்-சி' சத்து எல்லாப் பழங்களையும்விட அதிக அளவில் இருக்கிறது.



கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை, வாழை, தக்காளிப் பழங்களிலும், கீரை வகை ஆகியவைகளிலும் 'வைட்டமின்-சி' நிறைந்திருக்கிறது.

பழங்களுள் வாழைப்பழத்தைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். இந்த மலிவான பழம் நம் நாட்டில் எப்போதும் கிடைக்கிறது. வாழைப்பழத்தில் ஏராளமான அளவிற்கு எளிதாகச் செரிக்கக் கூடிய சர்க்கரை, 'வைட்டமின்-ஏ', 'வைட்டமின்-சி' ஆகியவற்றுடன் மிகவும் அவசியமான தாது உப்புக்கள் சிலவும் அடங்கியிருக்கின்றன. எல்லோருக்குமே நன்மை தரும் இப்பழம் வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல் ஆகியவற்றையும் நீக்குகிறது.

அன்றாடத் தேவையான 'வைட்டமின்-சி'யைப் பச்சைக் கீரை, முட்டைக்கோசு, சரியாகச் சமைக்கப்பட்ட காய்கறிகள் ஆகியவைகளை உண்பதன் மூலம் பெருமளவுக்குச் சரிக்கட்டி விடலாம். இதைத்தவிர, சிறிதளவு பழம், கீரை ஆகியவற்றை உட்கொண்டால் தேவையான அளவு 'வைட்டமின்-சி' கிடைத்து விடுகிறது. பள்ளிச் சிறுவர்களின் சீரான உணவில் நாளொன்றுக்கு 50-லிருந்து 70 மில்லி கிராம் வைட்டமின் 'சி' அடங்கியிருக்க வேண்டும்.


**பதன் செய்யப்பட்ட பழங்கள், காய்கறிகள்**

பழங்கள், காய்கறிகளைப் பதன் செய்தல் இலாபகரமானதொரு தொழிலாகும். மாம்பழம், அன்னாசிப் பழம், ஆரஞ்சு, பீச்-இவற்றுள் எது உங்களுக்கு மிகவும் பிரியமானதாக இருந்தாலும், அப்பழம் அதிகமாகக் கிடைக்கும் பருவங்களில் பதன் செய்து, டப்பாக்களில் அடைத்து விட்டால் ஆண்டு முழுவதும் உண்ணலாம்.

பழங்களுள் பெரும்பாலானவை இனிப்பான சாறுமிக்கவை. இச்சாற்றைப் பிழிந்து வேண்டுமென்கிறபோது உபயோகிக்க, சீசாக்களில் அடைத்து வைக்கலாம். இதைப்போலவே, பற்பல பழங்கள், காய்கறிகளினால் பல விதமான 'சட்னி' மற்றும் ஊறுகாய்கள் செய்யலாம்.

இயற்கை பரிவுடன் வாரி வழங்கும் பழங்களுள்-பழங்களின் மன்னன் எனப்படும் மாம்பழம் சத்து மிக்கது - எல்லோராலும் விரும்பப்படுவது, மாம்பழத்தையும் அது மலிவாக இருக்கும் காலத்தில் பதன் செய்து, அது கிடைக்காத காலத்திலும் கூட அதன் சுவையைப் பெற டப்பாக்களில் அடைத்து வைக்கலாம். பழங்களை 'முறப்பா' 'சட்னி' போன்றவைகளாகப் பதன் செய்து வைத்தல் நம் நாட்டில் பண்டைய காலத்திலிருந்தே





வந்த பழக்கமாகும். 'முறப்பா' நாட்டு வைத்தியங்களில்-முக்கியமாக யூனனி வைத்திய முறையில் முக்கியமான இடம் வகிக்கிறது. இவ்வைத்தியம் மொகலாய மன்னர்களின் காலத்தில் அரசாங்க ஆதரவைப் பெற்றுப் பெருமளவுக்குத் தழைத்திருந்தது.

மலிவாயிருக்கும் காலத்தில் காய்கறிகளையும், பற்பல வகைகளில் பதன் செய்யலாம். உதாரணமாகத் தக்காளியின் சாற்றினால், 'சாஸ்', 'கெச்சப்', 'சட்னி' ஆகியவை செய்யலாம்.

நல்ல இனத்தைச் சேர்ந்த பச்சைப் பட்டாணியையும் பதன் செய்து டப்பாக்களில் அடைத்து வைக்கலாம்.

வெயிலில் உலர்த்தி, காய்கறிகளைப் பதன் செய்தல் பழமையிலும் பழமையான காலத்திலிருந்தே வந்த முறை. நவீன முறையான-சீதோஷ்ணம், ஈரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்திய கூடங்களில்-பண்டங்களைப் பதன் செய்வதில் நன்மைகளுண்டு. இம்முறையில் சீதோஷ்ணம், காற்று ஆகியவை கட்டுப்படுத்தப்பட்ட 'டிஹைடிரேடர்' என்ற கூடத்தில் பழம் அல்லது காய் பதன் செய்யப்படுகிறது. பதன் செய்யப்படும் பண்டம் இம்முறையில் சீக்கிரமாக உலர்ந்து விடுகிறது.

**காய்கறிகள்**

தெளிவான கண்கள், அழகான தோல், நோயை எதிர்க்கும் தெம்பு ஆகியவற்றைக் கொடுக்கும் 'வைட்டமின்-ஏ', காய்கறிகளில் நிறைந்திருக்கிறது. ஆரோக்கியமான ஈறு, சருமம் இவைகளுக்குக் காரணமான 'வைட்டமின்-சி' யைப் பச்சைக் காய்கறிகளிலிருந்து பெருமளவுக்குப் பெறலாம். உருளைக் கிழங்கு, 'டர்னிப்' ஆகியவைகளும் 'வைட்டமின்-சி'யை அளிக்கின்றன.


**காய்கறிகளைச் சமைக்கும் முறை**


புத்தம் புதிய காய்கறிகளே மிகவும் சிறந்தவை. செடியிலிருந்து பறித்த உடனேயே காய்கறிகளைப் பயன்படுத்த வேண்டும். பறித்த காய்கறிகளை நாட்பட வைத்திருந்து பயன்படுத்தினால் வைட்டமின் சத்துக்கள் குறைந்துவிடும். காய்கறிகளை அறியும்போதும், சமைக்கும் போதும், சத்துப் பொருள்களை வீணாக்காமல் இருக்க வேண்டும். காய்கறிகளை நன்றாக அலசிக் கழுவலாம். ஆனால் தண்ணீரில் ஊற வைக்கக்கூடாது. வைட்டமின்களும், தாது உப்புக்களும் நிறைந்த பூக்கோசின் மேல் இதழ்களைக் களைந்து விடாமல் அவற்றைச் சன்னமாக அரிந்து 'சூப்' போன்றவைகளில் உபயோகிக்கலாம்.

**கிழங்குகள்**

கிழங்குகளின் தோலைச் சுரண்டி நீக்க வேண்டும். கடினமான தோலாக இருந்தால் இலேசாகச் சீவ வேண்டும். முள்ளங்கி, காரட் போன்றவற்றின் கீரை வைட்டமின்கள், தாது உப்புக்கள் நிறைந்தவை. இவற்றைக் களைந்து விடக் கூடாது. அநேக காய்கறிகளை 10 முதல் 15 நிமிடங்கள் வேக வைத்தால் போதுமானது. காய்கறிகளை வேகவிடும் போது பாத்திரத்தை நன்றாக மூடி வேகவிட வேண்டும். 'பைகார்பனேட் சோடா' சேர்க்கக் கூடாது. சோடாவினால் காய்கறிகளின் 'வைட்டமின்-சி' சத்து சேதமடைந்து விடுகின்றது. அதிக நேரம் வேகவிடுவதால் 'வைட்டமின்-சி' நஷ்டமடைந்து விடுகிறது. காய்கறிகளிலிருந்து முழு உணவுச் சத்தும் கிடைக்க, சமைத்த உடனேயே சாப்பிட்டு விட வேண்டும்.

உடலின் வைட்டமின் பற்றாக் குறையை நீக்க அந்தந்த வைட்டமின் கொண்ட காய்கறிகளை உண்ண வேண்டும். உணவு சீரானதாக அமைய அன்றாடம் ஒன்றல்லது இரண்டு காய்கறிகளை உட்கொள்ள வேண்டும். நமது உணவில் முக்கியமானதொரு அம்சமான காய்கறிகளை வீட்டுத் தோட்டத்திலே பயிர் செய்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.





# காய்கறிகள், பழங்களிலுள்ள வைட்டமின்களின் அளவு

*[உண்ணக்கூடிய பாகத்தில் — 100 கிராமில்]*

| உணவுப் பண்டங்களின் பெயர் | வைட்டமின் 'ஏ' மதிப்பு (இன்டர் நேஷனல் யூனிட்) | 'தியமின்' (மி. கி.) | 'ரிபோஃப்ளவின்' (மி. கி.) | நிகோடனிக் அமிலம் (மி. கி.) | வைட்டமின் 'சி' (மி.கி.) |
|---|---|---|---|---|---|
| **பழ வகைகள்:—** | | | | | |
| ஆப்பிள் | 0 | 0.12 | 0.03 | 0.2 | 2 |
| வாழைப்பழம் | 124 | 0.05 | 0.17 | 0.3 | 6 |
| பச்சை திராட்சை | 0 | — | — | 0 | 1 |
| நாட்டுக் கொய்யா | 0 | 0.03 | 0.03 | 0.4 | 212 |
| எலுமிச்சை | 26 | — | — | — | — |
| மாம்பழம் | 4,800 | 0.04 | 0.05 | 0.3 | 13 |
| ஆரஞ்சு | 326 | 0.12 | 0.06 | 0.3 | 68 |
| பப்பாளிப்பழம் | 1,110 | 0.04 | 0.25 | 0.2 | 57 |
| அன்னாசிப்பழம் | 30 | 0.20 | 0.12 | 0.1 | 39 |
| மாதுளம்பழம் | 0 | 0.06 | 0.10 | 0.3 | 14 |
| ஹைதராபாத் சீதாப்பழம் | 0 | 0.33 | 0.44 | 1.3 | 16 |
| தக்காளிப்பழம் | 585 | 0.12 | 0.06 | 0.4 | 27 |
| **கீரை வகைகள்:—** | | | | | |
| இளசான முளைக்கீரை | 9,200 | 0.03 | 0.10 | 1.0 | 99 |
| வெந்தயக் கீரை | 3,900 | 0.04 | 0.16 | 0.8 | 52 |
| முள்ளங்கிக் கீரை | 18,660 | 0.03 | 0.16 | 0.3 | 103 |
| ஸ்பைனஷ் | 9,300 | 0.03 | 0.07 | 0.5 | 28 |
| **கிழங்கு வகைகள்:—** | | | | | |
| காரட் | 3,150 | 0.04 | 0.02 | 0.6 | 3 |
| பெரு வெங்காயம் | 0 | 0.08 | 0.01 | 0.4 | 11 |
| உருளைக் கிழங்கு | 40 | 0.10 | 0.01 | 1.2 | 17 |
| சிவப்பு முள்ளங்கி | 5 | 0.06 | 0.02 | 0.4 | 17 |
| டர்னிப் | 0 | 0.04 | 0.04 | 0.5 | 43 |
| **காய்கறி வகைகள்:—** | | | | | |
| கத்தரிக்காய் | 124 | 0.04 | 0.11 | 0.9 | 12 |
| பூக்கோஸ் | 51 | 0.04 | 0.10 | 1.0 | 56 |
| நூல்கோல் | 36 | 0.05 | 0.09 | 0.5 | 85 |
| வெண்டைக்காய் | 88 | 0.07 | 0.10 | 0.6 | 13 |
| நெல்லிக்காய் | 15 | 0.03 | 0.01 | 0.2 | 600 |
| பச்சைப் பட்டாணி | 139 | 0.25 | 0.01 | 0.8 | 9 |
| முட்டைக்கோஸ் | 2,000 | 0.06 | 0.03 | — | 124 |

# காய்கறிகள், பழங்களிலுள்ள தாது உப்புகளின் அளவு

*[உண்ணக்கூடிய பாகத்தில் — 100 கிராமில்]*

| உணவுப் பண்டங்களின் பெயர் | 'கால்சியம்' (மி. கி.) | 'பாஸ்வரம்' (மி. கி.) | இரும்புச்சத்து (மி. கி.) |
|---|---|---|---|
| **பழ வகைகள்:-** | | | |
| ஆப்பிள் ... ... | 9 | 20 | 1.0 |
| வாழைப்பழம் .... .... | 10 | 30 | 0.5 |
| பச்சை திராட்சை .... .... | 20 | 30 | 1.5 |
| நாட்டுக் கொய்யா .... .... | 10 | 28 | 1.4 |
| எலுமிச்சை .... .... | 90 | 20 | 0.3 |
| மாம்பழம் .... .... | 10 | 20 | 0.3 |
| ஆரஞ்சு .... .... | 20 | 20 | 0.2 |
| பப்பாளிப்பழம் .... .... | 17 | 13 | 0.5 |
| அன்ஞசிப்பழம் .... .... | 20 | 9 | 1.2 |
| மாதுளம்பழம் ... .... | 10 | 70 | 0.3 |
| ஹைதராபாத் சீதாப்பழம் ... ... | 398 | 40 | 0.3 |
| தக்காளிப்பழம் .... .... | 48 | 20 | 0.4 |
| **கீரை வகைகள் :-** | | | |
| இளசான முளைக் கீரை .... .... | 397 | 83 | 25.5 |
| வெந்தயக் கீரை .... .... | 395 | 51 | 16.5 |
| முள்ளங்கிக் கீரை .... .... | 310 | 60 | 16.1 |
| ஸ்பைனஷ் .... .... | 73 | 21 | 10.9 |
| **கிழங்கு வகைகள்:-** | | | |
| காரட் .... .... | 80 | 530 | 2.2 |
| பெரு வெங்காயம் ... .... | 180 | 50 | 0.7 |
| உருளைக்கிழங்கு .... .... | 10 | 40 | 0.7 |
| சிவப்பு முள்ளங்கி .... .... | 50 | 20 | 0.5 |
| டர்னிப் .... .... | 30 | 40 | 0.4 |
| **காய்கறி வகைகள்:-** | | | |
| கத்தரிக்காய் .... .... | 18 | 47 | 0.9 |
| பூக்கோஸ் .... .... | 33 | 57 | 1.5 |
| நூல்கோல் .... .... | 20 | 35 | 0.4 |
| வெண்டைக்காய் .... .... | 66 | 56 | 1.5 |
| நெல்லிக்காய் .... .... | 50 | 20 | 1.2 |
| பச்சைப்பட்டாணி .... .... | 20 | 139 | 1.5 |
| முட்டைக்கோஸ் .... .... | 39 | 44 | 0.8 |



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை
# விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

# வரவு—செலவுத் திட்டமிடுதல்

எஸ். குகன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், நிதித்துறை,
தமிழ்நாடு அரசு.

'பட்ஜெட் என்னும் சொல் இந்திய அரசியல் அமைப்பில் எந்த இடத்திலும் பயன்படுத்தப் படவில்லை. அது, சட்டச் சார்பு உடைய சொல்லும் அல்ல. இங்கிலாந்தின் நிதி அமைச்சர் மக்கள் சபைக்கு, ஆண்டு நிதிநிலை பற்றிய திட்டங்களை வைத்து எடுத்துச் செல்லும் சிறிய தோல் பையையே அச்சொல் முதலில்குறித்தது. பயன்பாடு காரணமாக அச்சொல்லின் பொருள், பையிலிருந்து, அதன் உள்ளே இருந்த அறிக்கையைக் குறிப்பதாக மாறிவிட்டது. இச்சொல்லுக்குச் சமமான தமிழ்ச் சொற்றொடர் "ஆண்டு வரவு செலவு அறிக்கை" என்பது, இதன் பொருளை மிகவும் சரியாக உணர்த்துகிறது. இந்திய அரசியலமைப்பில் இதனைக் குறிக்க, "ஆண்டு நிதி நிலை அறிக்கை" என்னும் தொடரே பயன்படுத்தப்பட்டுள்ளது.

வருவாய்க் கணக்கு, மூலதனக் கணக்கு, பொதுநலக் கணக்கு எனப்படும் 3 தலையாய பகுதிகள் கொண்டதாக பட்ஜெட் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு கணக்கிலும் அந்த ஆண்டின் வரவு மற்றும் செலவு மதிப்பிடப் பெற்று, இரட்டைப் பதிவு சிட்டைப் பதிவேட்டு முறையில் எழுதப்படுகிறது.

வருவாய் வரவில் வரி, வரியல்லாத வருவாய், மாநில அரசால் பெறப்பட்ட மானியம் ஆகியவை அடங்கும். வருவாய்ச் செலவுகளில் முக்கியமாகச் சம்பளங்கள், படிகள், பராமரிப்பு ஒதுக்கீடுகள், வட்டி செலுத்துதல், ஓய்வூதியங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு மாநில அரசிலிருந்து அளிக்கப்படும் மானியங்கள் ஆகியவை அடங்கும். வருவாய் வரவு, வருவாய்ச் செலவை விட அதிகமானால், நாம் உபரி வருவாய் பெறுகிறோம். இது, மூலதனச் செலவுகளுக்கு நிதி உதவி அளிக்க தற்போது உள்ள சேமிப்புக் கிடைக்கிறது என்பதைக்காட்டுகிறது. இந்நிலைக்கு எதிர்மாறாக இருக்குமானால், வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இது, தற்போதைய செலவுகளின் ஒரு பகுதி, கடன் வாங்குவதன் மூலமாக நிதியுதவி பெறுகிறது என்பதைக் காட்டுகிறது.

கட்டடங்கள், சாலைகள், நீர்ப்பாசனம், இயந்திரங்கள் மற்றும் துணைச்சாதனங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்ட செலவுகள், பங்கு மூலதன முதலீடுகள் போன்றவற்றை மூலதனக் கணக்கு நிலவரப்படுத்துகிறது. மாநிலஅரசால் கொடுக்கப்படும் கடன் மற்றும் முன் பணம் ஆகியவையும் மூலதனக் கணக்கில் ஒரு பகுதியாக உள்ளன. இக்கடன்களிலிருந்து திருப்பி வசூலிக்கப்படும் தொகை, மத்திய அரசு மற்றும் இதர ஆதாரங்களிலிருந்து பெறப்படும் புதியகடன் மற்றும் முன் பணம் ஆகியவை மூல தனக் கணக்கின் வரவுப்பகுதியில் முக்கிய இடம் பெறுகின்றன.

பட்ஜெட்டின் மூன்றாவது தலையாய பகுதியாக உள்ள பொது நலக் கணக்கு கொடுக்கல் வாங்கல் நடைமுறைப் படுத்துதல் பற்றியதாகும். இது பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமானால், பல்வேறு வகையான பணங்களை ஏற்றுக் கொள்ளுதல், வைத்திருத்தல், திருப்பிக் கொடுத்தல் ஆகியவற்றில் ஒரு பேங்கரைப் போல் அரசு செயல்படுகிறது. இதில், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை கார்ப்பொரேஷன்கள், அரசால் ஏற்படுத்தப்பட்ட நிதி, பிராவிடெண்ட் பண்டுத் தொகை ஆகியவற்றின் வைப்புத் தொகைகள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற தனியார்களிடம் இருந்து பெறப்படும் வைப்புத் தொகைகள் ஆகியவை அடங்கும்.

ஆரம்ப பண இருப்பும், இம் மூவகைக் கணக்குகளிலும் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டின் முடிவில் இறுதிப் பண இருப்பைக் காட்டுகின்றன. இவ்வெண், கூடுதல் அல்லது குறைவாக இருப்பதற்கு ஏற்ப, பட்ஜெட்டில் ஒட்டுமொத்த உபரி அல்லது பற்றாக் குறை என்று குறிப்பிடப்படுகிறது.

பரந்த அடிப்படையில் பட்ஜெட்டின் அமைப்புகள் விவரிக்கப்பட்டு விட்டதால், நாம் இனி பட்ஜெட் உருவாக்கும் செயல் முறையை சுருங்கக்கூற முற்படலாம். ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கு வரவு-செலவுத் திட்டமிடுவதில், அரசினால் முன்பே அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிய செலவுகளே முதலில் இடம்பெறுகின்றன. அது போலவே, வரவுப் பகுதியில், தற்பொழுது நடைமுறையில் உள்ள வரிகளையும், உறுதியாகக் கிடைக்கக்கூடும் என்று தெரியக் கூடிய இதர வரவுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நாம் செயல்படத் துவங்கலாம்.

நடைமுறை நிலைமைக்கேற்ப வகுக்கப்படும் பட்ஜெட்டின் இப்பகுதி, பட்ஜெட்டின் முதல் பகுதி ( Part I ) என்று அழைக்கப்படுகிறது. இது ஆண்டு தோறும் அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் தயாரிக்கப்படுகிறது.

இதற்கிடையில், செப்டம்பர் மாதத்திலிருந்து செலவினங்களுக்குரிய அரசுத் துறை ஒவ்வொன்றும் பல புதிய திட்டங்களை அல்லது 2-ஆம் பகுதித் (Part II) திட்டங்களை உருவாக்குகின்றன. இதில், புதிய திட்டங்களைத் துவக்குதல், தற்பொழுது நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை மேம்பாட்டு நிலைக்குக் கொணர்தல் அல்லது விரிவுபடுத்துதல் அல்லது பொது நிருவாகத்தில் சீரமைப்புச் செய்தல் ஆகியவை பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. எண்ணிக்கையில் சுமார் 400 முதல் 500 ஆகும் இத்திட்டங்கள், ஒவ்வொரு துறையினாலும் முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தப் பட்டு, அவர்களுக்கு முன்பே தெரிவிக்கப்பட்ட மொத்த நிதி உச்ச வரம்புக்குள் அமைக்கப்படுகின்றன. இத் திட்டங்கள் ஒவ்வொன்றும் நிதித் துறையில் விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றன.

அமைச்சரவையின் நிலையான நிதிக் குழுவினால், இரண்டாம் பகு

இத் திட்டங்கள் டிசம்பர் மாத இறுதியில் விவாதிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்படுகின்றன. இக்குழுவிற்கு முதலமைச்சர் தலைவர் ஆவார். இக் குழு வழக்கமாக 2 நாட்கள் அமர்ந்து, அரசுத்துறைகளால் அனுப்பப்படும் புதிய திட்டங்கள் பற்றிய பல்வேறு முன்மொழிவுகளை தீவிரமாக ஆய்வு செய்கிறது. திட்டங்கள் தனித் தனியாக, அனுப்பியவாறே அனுமதிக்கப்படுகின்றன. அல்லது மொத்தத்தில் தள்ளுபடி செய்யப்படுகின்றன அல்லது தகுந்த வகையில் மாற்றியமைக்கப்படுகின்றன. இவ்வாய்வு நடக்கையில் திட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு இடையேயும், பகுதியொன்றின் இடையேயும் முன்னுரிமை விதிக்கப்படுகிறது.

ஜனவரி மாதத்தில் எல்லாத் திட்டங்களையும் முறையாக ஒன்று சேர்க்கும் நிலையில் உள்ளோம். அப்போது, நடைபெற்று வரும் திட்டங்களின் முதல் பகுதிச் செலவினங்கள், அதே போல் வரும் நிதிநிலை ஆண்டில் செலவிடத் திட்டமிட்டுள்ள 2-ஆம் பகுதித் திட்ட அல்லது புதிய திட்டச் செலவினங்கள் ஆகிய வற்றின் ஒட்டு மொத்தத் தோற்றம் தெரியவரும். மொத்தத் திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப, திட்டம் சார்ந்த திட்டங்களின் முதல் பகுதி மற்றும் 2-ஆம் பகுதி மதிப்பீடுகள் இரண்டும் சேர்ந்து அமைகின்றனவா என்றும் உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகிறது.

ஜனவரி மாத மத்தியில், ஆண்டுத் திட்டம் பற்றிய இறுதிச் சுற்று கலந்தாய்வு யூனியன் திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவருக்கும், முதலமைச்சருக்கும் இடையில் நடைபெறுகிறது. இக் கலந்தாய்வின் அடிப்படையில், ஒப்புக்கொள்ளப் பெற்ற திட்ட அளவுக்கு ஏற்ப, ஒதுக்கீடுகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த நேரத்தில், நடைமுறையில் உள்ள வரி விதிப்புகளிலிருந்து கிடைக்கும் வருவாய் மதிப்பீடுகளும், மத்திய அரசிலிருந்து கிடைக்கக் கூடிய வரவு மதிப்பீடுகளும் அன்றைய நிலைக்குத் தக திருத்தப்படுகின்றன. இந்தக் கட்டத்தில் ஒட்டு மொத்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் முடிவாகப் பெரும்பாலும் பற்றுக்குறை ஏற்படக்கூடும். இப் பற்றுக் குறையை நிறைவு செய்ய வேண்டும்.

செலவைக் குறைத்தல் மூலமாகவோ அல்லது வரவை அதிகப் படுத்தல் மூலமாகவோ தான் பற்றுக் குறையை நிறைவு செய்ய முடியும் என்பது பலரும் நன்கறிந்த உண்மையாகும். இன்றியமையாமை மற்றும் சிக்கனம் பற்றிய கண்டிப்பான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்பே, 2-வது பகுதித் திட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன என்று கொள்ளப்படுவதால் இந் நிலையில் புதிய செலவினங்களைக் குறைப்பதற்கு மேலும் வாய்ப்பில்லை. ஆயினும் நடைமுறையில் மேற்கொள்ளப் பெற்று வரும் செலவினங்களில் சிக்கனத்தை அனுசரிக்க முடியும். இதற்கான வாய்ப்புகள் முழு அளவில் துருவி ஆராயப்படுகின்றன. வரவுகளைப் பொறுத்த வரையில், அப்போதைய ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் மதிப்பீடுகள் முடிந்த அளவுக்கு மிதப்பாற்றல், தீவிர வசூல் முயற்சி ஆகியவைகளைக் கணக்கில் கொண்டு விரிவுபடுத்தப்படுகின்றன.

இவை எல்லாம் செய்யப்பட்ட பிறகும், பற்றுக்குறை ஏதேனும் இருக்குமானால் அதை நிறைவு செய்வதற்குரிய இதர ஒரே வழி புதிதாக வரி விதிப்பதுவேயாகும். வரி விதிப்புத் திட்டங்களை உருவாக்குவதில், மரபுப்படியான, அளவுகோலுக்கொத்த, எளிமை, சமநிலை, பயன், வசூலிப்பதற்கு ஆகும்செலவில் சிக்கனம்ஆகிய தர அம்சங்களுக்கு ஒத்து வருகிறதா என்று பார்க்கமுயற்சிக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் என்ன செய்து முடிக்க முடியுமோ, எதை ஏற்றுக் கொள்ளமுடியுமோ அதற்கேற்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு ஆகிய இரண்டையும் இணைத்திட முயற்சிக்கிறோம். தேவையான அரசியல் விருப்பம் மற்றும் முயற்சியையும் இணைத்திடுகின்றோம்.

ஜனவரி மாத இறுதியில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில், இறுதி நிருவாக ஒப்புதலைப் பட்ஜெட் பெறுகிறது. அமைச்சரவை அல்லது அதனுடைய குழுக்களில் ஒன்று புதிய திட்டங்கள், பட்ஜெட்டின் மொத்த அளவு, குறிப்பிட்ட வரி விதிப்புத் திட்டங்கள் ஆகியவற்றை அனுமதிப்பதால், பட்ஜெட் உருவாக்குவதின் எல்லா நிலைகளிலும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு முழு அளவில் உள்ளது.

பட்ஜெட் அறிக்கைகளை அச்சிடுவதற்குச் சுமார் ஒரு மாத காலமாகக் கூடும். இந்த ஒரு மாத கால இடைவெளிக்குப் பிறகு, மார்ச்சு மாத ஆரம்பத்தில் சட்ட மன்றங்களில் 'பட்ஜெட்' சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இப்பொழுது, பட்ஜெட்டின் முக்கியத்துவம் மற்றும்பயன்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளில் தொகுத்துக் கூற விரும்புகின்றேன். முதலாவதாக, சட்ட மன்ற ஆய்வு, அனுமதி, அரசுச் செலவினங்களில் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உதவும் கருவியாக 'பட்ஜெட்' விளங்குகிறது. இரண்டாவதாக, நிருவாகத்தினருக்கு ஒட்டுமொத்தமான கட்டுப்பாடு செய்வதற்கும், நிருவாகம் செய்வதற்குமான அடிப்படையை அளிக்கிறது. மூன்றாவதாக, விரிவானதாகவும், ஒருங்கிணைந்ததாகவும் உள்ள பட்ஜெட் அறிக்கைகள் பின்கண்டவாறு வினாக்களை எழுப்பவும் அதற்கு விடையளிக்கவும் வகை செய்கிறது :

—தன்னிடம் உள்ள ஆதாரங்களைக் கொண்டே அரசு இயங்குகிறதா?

—மூலதனம் உருவாவதற்கான நிதியளிக்க, தற்காலச் சேமிப்பு கிடைக்கிறதா?

—ஆண்டுத் திட்டத்தில் காணப்படும் முன்னுரிமைகள், மக்களின் இன்றைய பொது விருப்பத்தையும், மாநிலத்தின் நீண்டகால நலனையும் போதுமான அளவில் பிரதிபலிக்கின்றனவா?

—மாநில ஆதாரங்களின் அடிப்படையை மேம்படுத்தவும், அரசுக்கு வரவேண்டிய வரிகளை வசூலிக்கவும், இன்றியமையாதவை அல்லாத செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறதா?

இவ்வாறாக, 'பட்ஜெட்' என்பது, செலவில் கவனமாக இருக்கும் உணர்ச்சிவிழிப்புள்ள நிலைமை சிக்கனமாகவும் திறமையாகவும் செயல்படும் உணர்வு, முக்கியத்துவத்திற்கு ஏற்ப முன்னுரிமை அளித்துக்குறிக்கோளுடன் செயல்படும் உணர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கும் கருவியாக உள்ளது. இந்தக் காரணத்தினாலேயே பட்ஜெட்டை அலசி ஆராய்ந்து புரிந்து கொள்வது அவசியமாகும். பட்ஜெட் சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் நிருவாகிகளுக்கு மட்டுமல்ல, வரி செலுத்துவோருக்கும், பொதுவாழ்வில் ஈடுபாடு உள்ளோருக்கும், குடிமக்களுக்கும் பெருமளவில் பயனளிப்பதாக உள்ளது.

**(அனைத்திந்திய வானொலியில் 23—6—1977 அன்று ஒலிபரப்பப் பெற்ற உரையின் தமிழாக்கம்.)**

# மரவள்ளிக் கிழங்கு ஆய்வில் புதிய கண்டுபிடிப்புகள்






தமிழ்நாட்டில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் நிலப்பரப்பின் அளவு கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்த வண்ணம் உள்ளது. தற்பொழுது, சேலம் மாவட்டத்தில் 23,000 எக்டேர் பரப்பளவிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 15,000 எக்டேர் பரப்பளவிலும் இது பயிரிடப்பட்டு வருகின்றது. சேலம், தர்மபுரி தவிர மற்ற மாவட்டங்களில் இது ஓர் உணவுப் பொருளாகப் பயிரிடப்பட்டு வருகின்றது.

சேலம்—தர்மபுரி மாவட்டங்களில் இது மாவுப் பொருள் (ஸ்டார்ச்), சவ்வரிசி ஆகியவை தயாரிக்கப் பயன்படுகின்றது. தற்பொழுது சுமார் 700 தொழிற்சாலைகளில் 1.5 முதல் 2 இலட்சம் டன்கள் அளவுள்ள மாவுப் பொருள் சவ்வரிசி ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சுமார் 3 முதல் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள அளவு மேற்கு வங்காளம், மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

புதிய மரவள்ளிக் கிழங்கு இரகங்களான மளவல்லா, ஆனைக் கொம்பன் ஆகியவை தமிழ்நாட்டில் பரவலாகப் பயிரிடப்பட்டு வருகிறது. தற்பொழுது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து ''கோ. 1 மரவள்ளி'' இம்மாநில விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றது. இதனுடைய வயது 8.5 முதல் 9 மாதங்களாகும். (மற்ற இரகம் 10 முதல் 12 மாதங்களில் அறுவடைக்கு வரும்). இந்த இரக கிழங்கில் 35 சதம் மாவுப் பொருள் உள்ளது. இதைப் பயிரிடுவதன் மூலம் எக்டேருக்கு 10 டன் மாவுப் பொருள் கிடைக்கும். சராசரியாக இந்த இரகம் எக்டேருக்கு 30 டன், கிழங்குகளை மகசூலாகக் கொடுக்கின்றது. இந்த இரகத்தை 75 செ.மீ.× 75 செ.மீ. இடைவெளியில் நட்டால், மிகுந்த இலாபம் அடையலாம். 'மொசைக்' என்ற வைரஸ் நோய் இந்த இரகத்தில் மிகவும் குறைந்த அளவே தாக்குகின்றது. இதற்கு எக்டேருக்கு 50 கிலோ தழைச் சத்து, 50 கிலோ மணிச் சத்து, 100 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இட வேண்டும். இதை மானாவாரியில் பயிரிடுவதைவிட, இறவையில் பயிரிட்டு, வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் எக்டேருக்கு ரூ. 2,270 அதிக இலாபம் அடையலாம். மேலும் மரவள்ளியில் ஊடுபயிராக பெரிய வெங்காயத்தைப் (பெல்லாரி வெங்காயம்) பயிரிட்டால் எக்டேருக்கு 1,036 ரூபாய் அதிக இலாபம் அடையலாம்.

மேற்கூறியபடி, மரவள்ளியை புதிய முறைகளைக் கையாண்டு பயிர் செய்தால் குறைந்த செலவில் நிறைந்த இலாபம் அடையலாம் என்பதில் சந்தேகமில்லை. மேலும் ஒரு டன் மக்காச்சோளத்தை உற்பத்தி செய்ய 153 மனித நாட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அதே அளவு மரவள்ளியை உற்பத்தி செய்ய 30 மனித நாட்களே போதுமானது.






தகவல் : தோட்டக்கலைத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

வெளியீடு :
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி



# கொடைக்கானல்—பழனி மலைச் சாலை

**தேவை:** நம் நாட்டில் பல பாகங்களிலிருந்தும் உல்லாசப் பயணிகள் தேக ஆரோக்கியத்தை முன்னிட்டு குளிர்ப் பிரதேசமான கொடைக்கானலுக்குப் பெருமள வில் செல்லுகின்றார்கள். ''ஆறு படை வீடுகளில்'' ஒன்றான பழனி யில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைத் தரிசிக்க பக்த கோடிகள் பெருமளவில் பழனி யில் குவிகின்றார்கள். இந்தப் பழனி, மலையின் மறுபக்க அடி வாரத்தில் அமைந்துள்ளது.

தற்போது கொடைக்கானலை யும் பழனியையும் நேரடியாக் இணைத்திட சாலை வசதி இல்லை. கொடைக்கானலிலிருந்து வத்தல குண்டு, செம்பட்டி மற்றும் ஒட் டன்சத்திரம் வழியாகப் பழனியை அடைய அமைந்துள்ள சாலை வழி சுற்று வழியாக 136 கி.மீ. தூர முள்ளதாக அமைந்துள்ளது. நாற்பது கி.மீ. நீளமுள்ள இந்தப் புதிய மலைச்சாலை பழனியை யும் கொடைக்கானலையும் நேரடியாக இணைத்துப் பயண தூரத்தை 66 கி. மீட்டராக குறைத்துப் பயணிகளுக்கு மிகவும் உதவுகிறது. இந்த மலைச்சாலை 7.5 மீ. அகலமுள்ள 3.75 மீ. அகலம் தார் பரப்புடைய தளங் கொண்ட, முக்கியத்துவ மாவட்ட சாலைகளின் தரத்தை உடையது. இந்த மலைச்சாலை, நம் நாடு சுதந் திரம் அடைந்தபின் அமைக்கப் பட்ட மிக நீளமான மலைச்சாலை ஆகும்.

**அம்சங்கள் :** புதிய மலைச்சாலை, லாஸ் மலைச்சாலையில் 41/2 கி.மீ. இல் ஆரம்பித்து பெருமாள் மலை, நாய்க்கன் கால்வாய்மேல்பள்ளம், கோம்புகாடு, சௌரிகாடு மற்றும் வண்ணாத்தி ஊற்று வழியாக, பழனி மருங்கில் மலை அடிவாரத் திலுள்ள தேக்கன் தோட்டத்தில் முடிவடைகிறது. அங்கிருந்து பழனியை அடைய 13 கி.மீ. நீள சாலை முன்பே அமைந்துள்ளது. மலைச்சாலையின் மொத்த நீளம் 40 கி.மீ. ஆகும். பாரதி அண்ணா நகர், வடகவுஞ்சி மற்றும் அஞ்சு ரான் மந்தை ஆகிய சிற்றூர் களுக்கு இணைப்புச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பிற் பட்ட நிலைகொண்ட பகுதியில் உருவாகியுள்ள இம்மலைச்சாலை அப்பகுதிகளுக்கு முன்னேற்ற மடைவதற்கான பல வாய்ப்பு களை ஏற்படுத்தி, அங்கு வாழும் மக்களின் சமூக வாழ்வு, சுகா தாரம் மற்றும் பொருளாதாரம் உயர்வடைய உதவும் என்பதில் ஐயமில்லை. இவ்வட்டாரங்களில் பயிராகும் காபி, ஆரஞ்சு மற்றும் வாழை போன்ற மலைப்பொருட் களை விரைவாகவும் சேதமில்லாம லும் விற்பனைக் கூடங்களுக்குச் சௌகரியமாக எடுத்துச் செல்ல இனி முடியும். இத்திட்டம் சுதந் திர இந்தியாவில் நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையினரால் எடுத்து முடிக்கப்பட்ட பெரிய திட்டமுமாகும்.

**அமைப்புப்பணி :** நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறையின் ஓர் அங்கமாக விளங்கிவரும் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு இப் பணியைச் செய்துள்ளது.

பணியின் மதிப்பு—ரூ. 135.00 இலட்சம்.

பணி துவங்கியது—பிப்ரவரி திங்கள், 1972.

பணி நிறைவு பெற்றது—மே திங்கள் 1977.

**தொழில்நுட்ப விவரங்கள் :**

சாலையின் நீளம்—40 கி.மீ.

தள அமைப்பு அகலம்—7.5 மீ.

தள அமைப்பு —15 செ. மீ.

கனத்திற்கு நீர்விட்டு உறுதி யாக்கிய கற்சாலை.

மேற்பரப்பு—25 செ. மீ. கனத் திற்குத் தார் அமைப்பு.

கொண்டை ஊசி வளைவுகள்—13 சிறு பாலங்கள்—163.

பாறை உடைப்பு வேலை—4,59,000 க.மீ.

தாங்கு சுவர் வேலை—1,23,000 க.மீ.

மிக உயரமான பகுதி—பெரு மாள்மலை 1583 மீ.

மிகத்தாழ்வான பகுதி—தேக்கன் தோட்டம் 692 மீ.



# உங்கள் பணத்தை இரட்டிப்பாக்கவும்!

தேசிய சேமிப்புப்
பத்திரங்கள் மூலம்
(V-வது வெளியீடு)

ரூ. 100,
7 வருடத்தில்
ரூ. 200 ஆக
வளர்கிறது.

வேறு சில நலன்களும் உண்டு!

* வரியில்லா வட்டி
(வருடம் ரூ. 3,000 வரை)

* சொத்து வரியிலிருந்து
விலக்கு
(ரூ. 1.5 லட்சம் வரை)

davp 76/927

இதர விவரங்களுக்கு
அங்கீகாரம் பெற்ற
ஏஜண்டையோ
தபாலாபீஸிலோ
விசாரிக்கவும்.

தேசிய சேமிப்பு நிறுவனம்

# மத்திய சாலை நிதி வேலைகள்

அந்நாளைய மத்தியச் சட்ட சபையின் தீர்மானத்தின்படி இந்திய அரசு 1929-ஆம் ஆண்டில் காலக் கெடுவற்ற மத்திய சாலை நிதியை ஏற்படுத்தியது. இந்நிதி பின்தங்கியுள்ள பகுதிகளில் சாலை வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. பெட்ரோல் மற்றும் மோட்டார் வாகன எரி பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி மற்றும் சுங்கத் தீர்வை ஆகியவைகளின் ஒரு பங்கு இத் திட்டத்தின் வருவாயாக ஒரு லிட்டருக்கு 3.5 பைசா வீதம், பற்று வைக்கப்படுகின்றது. மேற்படிக் கணக்கீட்டின்படிப் பெறப்படும் வருவாயில் 80 சதவீதம் மாநில அரசுகளுக்கு அந்தந்த மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்ட அளவுகளுக்கேற்பப் பங்கீடு செய்யப்படுகின்றது. இவ்வாறு மத்திய அரசால் வழங்கப்படும் தொகைகள் மத்திய அரசால் ஒப்புதலளிக்கப்படும் வேலைகளுக்குச் செலவிடப்படவேண்டும். மேற்படி வருவாயில் மிஞ்சியுள்ள 20 சதவீதம், மத்திய அரசால் சேமநிதியாகப் பற்று வைக்கப்படுகின்றது. மத்திய சேமநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு ஆகும் செலவை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியை மான்யமாகவோ வழங்குகின்றது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று இத்திட்டத்தின் கீழ் வேலைகள் மாநில அரசால் நிறைவேற்றப்படுகின்றன.

நான்காவது திட்ட காலத்தில் 478 இலட்ச ரூபாய் செலவில் 21 வேலைகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவ்வேலைகளில் 220 இலட்ச ரூபாய் செலவில் மூன்று மலைச் சாலை வேலைகள் மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவை: (1) கொடைக்கானல் பழனி மலைச் சாலை (2) பாச்சலூர் வடகாடு ஒட்டன்சத்திரம் மலைச் சாலை, மற்றும் (3) பண்ணைப் பட்டி பாச்சலூர் சாலையிலுள்ள ஆடலூரிலிருந்து தாண்டிக் குடி மலைச் சாலையை இணைக்கும் ஒரு மலைச்சாலை.

இதுவரை ஐந்தாவது திட்ட காலத்தில் 178 இலட்ச ரூபாய் மதிப்பில் 10 வேலைகளுக்கு மத்தியஅரசு ஒப்புதல் அளித்துள்ளது. அண்மையில் இத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட முக்கியமான வேலைகளில் சில (1) எடைக் காட்டூர் மற்றும் பெரிய கோட்டை கிராமங்களை இணைக்கும்படி வைகையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ஒரு மூழ்கு பாலம் (இராமனுதபுரம் மாவட்டம்) (2) கைகளத்தூர் பெரிய வடகரைச் சாலையில் கி.மீ. 1/2 கல்லாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ஒரு மூழ்கு பாலம் (திருச்சி மாவட்டம்) (3) அரவக்குறிச்சி சின்னதாராபுரம் சாலையில் கி.மீ. 3/2-ல் இராஜபுரம் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ஒரு மூழ்கு பாலம் (திருச்சி மாவட்டம்).

நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் முக்கிய வேலைகளாவன: (1) எலையமுத்தூர் கல்லாபுரம் சாலையில் கி.மீ. 5/6 இல் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் (கோவை மாவட்டம்) மதிப்பு: ரூ. 11.55 இலட்சம். (2) பாளையம்கோட்டை நாகலாபுரம் சாலையில் கி.மீ. 11/8-ல் சீவலப்பேரி யருகே, தாமிரபரணி ஆற்றில் குறுக்கே ஒரு தாம்போதி, மதிப்பு ரூ. 20.5 இலட்சம். (3) மதுரை—தனுஷ்கோடி சாலையில் கி.மீ. 178/2-லிருந்து ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி கோவிலுக்கு ஒரு சாலை (இராமேஸ்வரம் தீவு. இராமநாதபுரம் மாவட்டம், மதிப்பு ரூ. 8.80 இலட்சம்.

## சிறு சேமிப்பை பிரபலமாக்கும் நடவடிக்கைகள்!

நம் நாட்டில், குறிப்பாக கிராமப் பகுதிகளில் சிறு சேமிப்பை பிரபலமாக்குவதற்கென அஞ்சல் தந்தித் துறை, மே மாதம் 15-ந் தேதி முதல் துறை ரீதியிலான 97 ஆயிரம் கூடுதல் கிளை அஞ்சல் நிலையங்களில் ஒருபுதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. அஞ்சல் நிலையங்களில் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்கள் கணக்கிலிருந்து 100 ரூபாய் வரையில் தான் தற்போது பணம் எடுக்க முடியும். அஞ்சல் தந்தித் துறை அறிமுகப்படுத்தவிருக்கும் புதிய வசதியின்படி அஞ்சல் நிலையங்களில் சேமிப்புக் கணக்குகள் வைத்திருப்பவர்கள் 250 ரூபாய் வரையில் பணம் எடுப்பதற்கு அனுமதி வழங்க இத்துறை ரீதியிலான கூடுதல் கிளை அஞ்சல்-அலுவலர்களுக்கு ஒப்புதல வழங்கப்பட்டுள்ளன.

சேமிப்புக் கணக்குக் கவுண்ட்டர்களில பொது மக்கள் நீண்டநேரம் காத்திருப்பதைத் தவிர்க்கும் விதத்தில் தலைமை அஞ்சல் நிலையங்கள், 5,400 துணை அஞ்சல் நிலையங்களில் 'உடனடிச் சேவை கவுண்ட்டர்கள்' ஏற்படுத்தப் பட்டுள்ளன. துணை அஞ்சல் நிலையங்களில் பணம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த அளவும் 100 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

# பாரதி வேண்டிய பெண் விடுதலை



''ஆண் பெண் சமத்துவமே அறமென்று தெரிகிறதா? வாருங்கள்! மாதர்களை இலட்சக் கணக்கில் விடுதலை செய்வோம்'' என்று அழைக்கிறான் பாரதி.

சில்லறைச் சீர்திருத்தக்காரர்கள் போல், பெண் மக்களுக்கான சில சிறு சிறு சீர்திருத் தங்களைப் பாரதி பாடவில்லை. ''ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'' என்று ஆண்—பெண் நேர்—நிகர் வாழ்வையே கோருகிறான். ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்து வோம்'' என்று.பாரதி பாடும்பொழுது பெண் ணடிமையைச் 'சொக்கப்பனை' கொளுத்த அவன் மூட்டும் நெருப்பை வளர்க்க 'டின் டின்' ஆக எண்ணெய் கொண்டு போகவேண்டும் என்று நம்மிடம் ஆவேசம் பாய்கிறது.

அரசியல் விடுதலையையும், பிற விடுதலை களையும் பெண் விடுதலையை மறந்து, பேசித் திரிந்த பெரியார்களையும் 'வீரர்களையும்' பார்த்து,

**''விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் சொல்வீர்**
**விடுதலை யென்பீர், கருணை வெள்ளமென்பீர்**
**பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லையென்றால்**
**பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை''**

என்று கிண்டல் செய்தும், மண்டையிலடித்தும் மயக்கம் தெளிவிக்கிறான்.

''பெண்டாட்டிதனை யடிமைப்படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?

என்று பாரதி 'ஈரேழுலகமும்' ஊடுருவிப் பாயும்படி ஒரு கேள்வியைப் போடும்பொழுது, 'ஆயிரம்ஆயிரம்ஆண்டுகளாகத் தாயினத்திற்கு இழிந்த தன்னலத்தால் என்ன அநீதம் புரிந் தோம்' என்று நம்மை நாமே சபிக்கத் தோன்றுகிறது.

பாரதி சோவியத் பெண்ணைக் (நவீன ரஷ்யா''வின் பெண்ணை) கண்டான். ''நங்கை கூறும் நவீனங்களையும்'' ''பெண்மைத் தெய் வத்தின் பேச்சுகளை''யும், ''உதய கன்னியின் உரையாடல்களை''யும் கேட்டான். புதுமைப் பெண்ணைக் கண்டு, அவளை அழைத்து வந்து, தமிழர்களிடையில்''துன்பம் நீக்கும்சுதந்திரப் பேரிகை'' முழக்கச் செய்கிறான்.

புதுமைப்பெண், தனது 'வண்ணமலர்த் திருவாயால்'

''அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தர்''

என்றும்,

''சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டும்''

என்றும்,

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்கும்''

என்றும்,

''நாணுமச்சமும் நாய்கட்கு வேண்டும்
ஞானம் நல்லறம் வீர சுதந்திரம்
பேணுநற்குடி பெண்ணின் குணங்கள்''

என்றும்,

''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் [யும்
திமிர்ந்த ஞானச்செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லை''

என்றும்,

''உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேறவும்
ஓது பற்பல நூல்வகை கேட்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலகவாள் நுதலார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திட வேண்டும்''

என்றும்,

''விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப்பெண்கள் விரைவில் ஒழிப்பர்''

''சாத்திரங்கள் பலபல கற்பர்
சௌரியங்கள் பலபல செய்வர்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பர்
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பர்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வர்''

என்றும் சீனியின் பந்தலில் தேன்மாரியாகப் பொழிகிறான்.

''ஒவ்வொரு சமையற்காரியும் அரசாங் கத்தை நடத்தக் கற்றுத் தீர வேண்டுமென்றார் புது உலகச் சிற்பி லெனின் அன்று. சோவியத் ஆட்சி அத்தகைய வாய்ப்பு அளித்தது புதுமைப் பெண்ணுக்கு.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைகாண் என்று கும்மியடி''

என்று கும்மியடித்தான். பாரதியின் கனவு இன்று நனவாகி வருகிறது நாடு முழுவதிலும்.


**('பாரதி வழி' என்னும் நூலிலிருந்து......)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!





| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெருத பிற பணிகளுக்கு | 3.50 | |









வேலை நேரம் :
உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.


நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்க
தமிழ்நாடு அ

பதிவு எண. M. 8676



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"

''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"



நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
கத்தில் அச்சிடப்பட்டது.
னர் தோட்டம், சென்னை-600002.